


பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 20 ரபி அவ் 23 இதழ் 22
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-3-78

கண்ணன்
களஞ்சியம்
40, பிரதான வீதி,
(மில்க்பாருக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
முட்டைகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் வாங்கப்படும்
விற்கப்படும்.
வாங்கும் விலை 53 சதம்
விற்கும் விலை 55 சதம்
5 மைல் சுற்றளவிற்குள் வந்து
வாங்கப்படும்.

துரையப்பா காருக்கு குண்டு வீச்சு

சந்திரசேகரா ஜீப்புக்கு குண்டுவீச்சு

கோப்பாய் வங்கி கொள்ளை முயற்சி

# சிவகுமாரன் 'விளையாட்டு' பற்றி விளக்கச்சொன்னார் டி. ஐ. ஜி.

## தமிழ் இளைஞர்களைத் தலைவர்கள் தவறாக வழிநடத்துகிறார்களென்றும் கூறினாராம்

### சன்சோனி கமிஷன்முன் கான்ஸ்டபிள் ராமுப்பிள்ளை

-நமது நிருபர் கா. யோகநாதன்-
(யாழ்ப்பாணம்)

'தமிழ்த் தலைவர்கள் குறிப்பாக திரு அமிர்தலிங்கம் இளைஞர்களைத் தவறான பாதையில் வழிநடத்திச்செல்வதாக டி.ஐ.ஜி. அனே செனிவரத்தினா யாழ். பொலிஸ்நிலையத்தில் நடந்த மாநாட்டில் கூறினர்.

'இதனால் இளைஞர்கள் பல செயல்களில் ஈடுபடுவதாகவும் தற்கொலை செய்த சிவகுமாரன் பல காரியங்களைச் செய்துள்ளதாகவும் டி.ஐ.ஜி. தெரிவித்தார்.

'தமிழ்ப்பொலிசார் தமிழர்விடுதலைக்கூட்டணிக்கு நிதிஉதவி அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.'

கோப்பாய் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பொன்னையா இராமுப்பிள்ளை நேற்று சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

விசாரணையைப் பார்ப்பதற்காக நேற்று மாணவர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். இறுவர்கள் பலரும் வந்திருந்தனர். யாழ். எம்.பி திரு வெ. யோகேஸ்வரன் வந்திருந்தார். நேற்று கிராமசேவகர்களும்வந்திருந்தனர்.

### சிவகுமாரன் பற்றி...

கான்ஸ்டபிள் இராமுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

"அம்மாநாட்டில் யாழ். பொலிஸைச் சேர்ந்த நடராசாவும் இழிந்தார். உடனே டி. ஐ. ஜி. அனே செனிவரத்தின, நடராசாவைப் பார்த்து "மிஸ்டர் நல்ராசா, அந்தச் சிவகுமாரன் செய்த விளையாட்டுகளை பொலிஸாருக்கு விளங்கப்படுத்தும் பார்ப்போம்" என்று கூறினர்.

கூடனே நடராசா எழுந்து; "யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவின் காருக்கு சிவகுமார் குண்டு வைத்து சேதப்படுத்தினர்.

"எஸ்.பி. சந்திரசேகராவின் ஜீப்பிற்கு சிவகுமாரன் குண்டு வீசினர்.

'கோப்பாய் வங்கியைக் கொள்ளையடிக்கமுயற்சித்தார்' என்றார்.

சட். பார்லட்: சிவகுமாரன் இறந்துவிட்டார்?-ஆம்

சட்: ஒருவருடத்தின்முன்பு?- ஆம்

சட்: தமிழர்கூட்டணிக்கு நீர் நிதி உதவி அளித்தீரா? நான் அப்படி கொடுக்கவில்லை. இதெல்லாம் வீண்பொய்க் குற்றச்சாட்டு

சட்: அப்படி, அந்த மாநாட்டில் டி ஐ ஜி வேண்டுமென்றே, கூறினர்? ஆம்.

சட்: அண்டலூட்: ஏ எஸ் பி. நூர்தீன், கட்டளையிட்டதும் பொலிசார் துவக்கு எடுத்தனர்? ஆம்.

சட்: துவக்குகளை பதிந்து எடுக்கவேண்டும்? ஆம்.

சட்.: அப்போ நூர்தீன் என்ன சொன்னர்? 'புத்தகங்களை வீசிவிட்டு, அங்குள்ள துப்பாக்கிகளை கொண்டுவாருங்கள். நாங்கள் துப்பாக்கிகளை சாப்பிடமாட்டோம் என்றார்.

சட்: அதனல் கான்ஸ்டபிள்கள் தங்கள் விருப்பம் போல் துவக்குகளை எடுத்தனர்? ஆம்.

சட்: அன்று வழக்கம்போல் மக்கள் சாதாரணமாக வேலைக்குப்போனர்களா? சிலர் மட்டும் வீதியில் காணப்பட்டனர் ஒருவரை அடிக்க மற்றெல்லாரும் ஓடினர்கள்.

சட: ஆத்திரமூட்டக்கூடிய விதத்தில் அவர்கள் நடந்து கொள்ளவில்லை? இல்லை.

கமிஷனர்: ஏ. எஸ். பி. நூர்தீன் வந்தார்? ஆம்.

சட்டத்தரணி சில்வா: 17ம் திகதி இரவு எங்கு படுத்திருந்தீர்? பழைய பொலிஸ் நிலைய

(8-ம் பக்கம் பார்க்க)

## வியட்நாம் பிரதமரிடம் தமிழர் நிலைபற்றி 'அமிர்'

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று கொழும்பில் வியட்நாம் பிரதமர் திரு. பாம் வான் தொங்கைச் சந்தித்து இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னை குறித்து விரிவாக எடுத்துக் கூறினர்.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனதிபதி மாளிகையில் நேற்று வியட்நாம் பிரதமருக்கு அளித்த பகற்போசன விருந்தின்போதே திரு அமிர்தலிங்கம் திரு பாம்வான் தொங்கைச் சந்தித்து சுமார் அரை மணி நேரம்வரை பேச்சு நடத்தினர்.

திரு. ஜெயவர்த்தன வியட்நாம் பிரதமருக்கு திரு. அமிர்தலிங்கத்தை அறிமுகப்படுத்திய பின்னர் திரு அமிர்தலிங்கம் தமிழ்மக்களின் நிலைகுறித்து திரு. தொங்குக்கு எடுத்துக் கூறியபோது சபாநாயகர் திரு ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அவர்களுடன் இருந்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நோக்கம் என்ன என்று திரு தொங் கேட்டதற்கு, இரு இனங்கள் வாழும் இந்நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை வென்றெடுக்கப் போராடுவதே தமிழர் விடுதலைக்கூட்டணியின் இலட்சியம் என திரு அமிர்தலிங்கம் கூறினர்.

தமிழ் மக்களினதும் சிங்களவர்களினதும் கலை கலாச்சாரங்கள் முற்றிலும் மாறுபட்டவை இவற்றை தாங்கள் தமிழ் பகுதிகளுக்கு வந்து பார்க்கவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டபோது, தமிழ் பகுதிகளுக்கு விஜயம் செய்ய விரும்புவதாகவும் இம்முறை முடியவில்லை என்றும் ஒருமுறை தமிழ் பகுதிகளுக்குத் தாம் வரவுள்ளதாகவும் திரு. தொங் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ். அரசாங்க அதிபராக ஜோசப் நியமனம்

## 16 ஆண்டுகளின் பின்னர் நியமனம் பெறும் முதல் தமிழர்



(யாழ்ப்பாணம்)

திரு. அந்தனி அல்பிரட் ஜோசப் யாழ் மாவட்ட அரசாங்கஅதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். பதினறு ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது இதுவேமுதல் தடவையாகும்.

யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்த திரு ஜோசப், உள்ளூராட்சி அமைச்சின் உதவிக் காரியதரிசியாகவும் இலங்கையின் பல பாகங்களிலே உதவி உள்ளூராட்சி ஆணையாளராகவும் கடமையாற்றிய பின்னர், 1971ம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க

(8-ம் பக்கம் பார்க்க)

பனைமரங்கள், சிலாகைகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாய விலையில் விற்பனைக்குண்டு.
டொலர் அலுமினியம் தொழிற்சாலை
மாவிட்டபுரம். 8663

## வரி விளம்பரம்

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நம்பிக்கையும், அனுபவமுமுள்ள விற்பனையாளர்கள் தேவை. சமீபத்தில் பெற்றுக்கொண்ட தங்கள் பகுதி கிராம சேவகர் வேறும் இரு முக்கியஸ்தர்களினதும், உடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலை தலைமையாசிரியரின் நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கோ 53, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8638

ஸ்ரீல் கதிரைகள், மேசைகள், ஹுக்ஸ், ['ராக்கை'] முதலியன செய்வதில் நல்ல அனுபவமுள்ள வெல்டர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 8646. C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8646

பாக்ஸ் இன்டஸ்ரீஸில் பாக்ஸ் (Bags) ஒட்டுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஜி. எஸ். கே. ஸ்ரோர்ஸ், 275, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8649

சமையல் வேலை செய்வதற்கும், வீட்டை பராமரிப்பதற்கும் பெண் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:- 8659, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8659

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் எழுதுவினைஞராகவும், காசாளராகவும் கடமையாற்ற கணக்கெழுதுவதில் அனுபவமும், ஆங்கிலம் தெரிந்தவரும், தட்டச்சு அனுபவம் உள்ளவருமான ஒருவர் தேவை. விண்ணப்பக்காரர் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தை அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி, யாழ். மோட்டார் ஸ்ரோஸ், 108/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8651

வசதிகள், சேவைகள் கட்டணப் பணத்தில் பாலர்வகுப்பு பயிற்சியுடன் தையல், சங்கீதம் தெரிந்த ஆசிரியைகள் தேவைப்படுகின்றனர். தகுதியும், அனுபவமும் உள்ளவர்கள் 15-3-78க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும். அதிபர், யா./பலாலி வடக்கு, அ. த. க. பாடசாலை, காங்கேசன்துறை. 8665

### விற்பனைக்கு

கலப்பற்ற அல்ஷேஷன் தாய் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இனவிருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்ஷேஷன் ஆண் நாய்களும் உண்டு. K. நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை. 8648

16" X 10" பாக்ஸ்ரரி இறசர் புது மொடல். Bronze Bearing, Automatic Greasing. அதிகம் பாவிப்பில்லை. என்சின் இல்லை. கு. விவேகானந்தன், வல்வெட்டித்துறை. 8656

### கல்வி

பிராஜ்மல் லேர்னர், "சிவ் மன்றம்," தெல்லிப்பழை (கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில்) ஆங்கிலம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் மாணவரின் வசதிக்கேற்றபடி நடைபெறுகின்றன. 8661

### பயிற்சி

வெல்டிங் பயிற்சி (Arc Welding) A. W. S. பாடத்திட்டத்தை அனுசரித்து நடாத்தப்படும். 3 மாதகால பயிற்சி 12-3-78ல் ஆரம்பமாகின்றன. பயிற்சியின் இறுதியில் நாம் வழங்கும் டிப்ளோமா பத்திரம் வேலை வாய்ப்பு தேடித்தரும். சகல நிறுவனங்களால் ஏற்கனவே பெருமதிப்பைப் பெற்றவை. விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபால் உறை அனுப்பவும். அக்ரோ என்ஜினியேஸ், 135, செண். பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம். 8669

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## கேள்விப்பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கும், குத்தகைக்கும் இந்நகராட்சி மன்றச்சபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. குசவமடம் பொதுக் கிணறு திருத்துதல்.
2. யாழ். வீதி நுணுவில் மடம் திருத்துதல் (ஏற்றத்தடி)
3. காரியாலயத்திற்கு மை பூசுதல்.
4. நூல்நிலையம்திருத்துதல்.
5. மீன் சந்தை திருத்துதல்.
6. காரியாலயத்தின் முன் சுற்று வட்டம் அமைத்தல்.

கேள்விப்பத்திரங்கள் 16-3-78ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் இந்நகரசபை அலுவலகத்தில், கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப்பணமாகவும், கேள்விப்பத்திரம்ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/-கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் காகிதஉறைக்குள் வைக்கப்பட்டு உறையின்மேற் பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி என விலாசமிட்டு 21-3-78ம் திகதி முற்பகல் 9-30மணிக்கு முன் இந்நகராட்சிமன்றத்தின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும் அல்லது அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும், விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 2-3-78.

8666

## புளியம்பொக்கணை பொங்கல் 24 ம் திகதி

(யாழ்ப்பாணம்)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன் கோவில் பரிபாலன சபையின் விசேஷ கூட்டம் கோவில் முன்றலில் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் கூடியது.

வழமைபோல் இவ்வருடமும் ஆண்டுப் பொங்கலை விமரிசையாக இம்மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தன்று நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டது:

இவ்வைபவத்திற்கு கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரியைத் தலைமை வகிக்க அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றை நிருவகிக்கச் சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

கோவிற் கும்பாபிஷேகத்தை அடுத்த வருடம் சிறப்பாக நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. திருவாளர்கள்: க. குமாரசாமி, வே. கதிர்காமர், எஸ். செல்லையா, க. வைரமுத்து, நா. வீரகத்திப்பிள்ளை, அ. வைரமுத்து, கி. மாலகப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர். (அ)

## வழிப்பறிக் கொள்ளை

(வவுனியா)

இரவு பதினொருமணியளவில் லொறி ஒன்று வழிமறிக்கப்பட்டு அதில் பயணம் செய்த வர்த்தகரிடம் இருந்து பத்தாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாக ஐவர் கைதாகியுள்ளனர். (உ)

## "இனபேதத்திற்கு அப்பாற்பட்ட இயக்கம்"

[மட்டுவில்]

"மனம், வாக்கு, காயம் ஆகியவற்றின் சக்தியுடன் புனித சேவையை என்றும், எப்பொழுதும், செய்யத்தயாராக இருக்கும் ஒரு இயக்கம்தான் இளைஞர் சாரணிய இயக்கம். இளைஞர் [சாரணியத்தின் சேவையை இன, மத, மொழி ஆகிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பெரு நோக்குடன் செய்யப்படுவது புனிதமானது"

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற இளைஞர் சாரணிய ஸ்தாபகர் இல்லெல் பேடன் பவெல் பிரபுவின் நினைவுதின விழாவில், பேசுகையில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகர் கூறினார்.

சாவகச்சேரி மகிழம்கேணி மைதானத்தில், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் தலைமையில், தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி சாரணிய ஆசிரிய சங்கத்தினால் இந்த விழா நடத்தப்பட்டது. (உ)


## எச்சரிக்கை

சில நேர்மையற்ற வர்த்தகர்கள், சட்டவிரோதமான முறையில் தரமற்ற தேங்காய் எண்ணெய் அடைக்கப்பட்ட ஒரு கலன் தகரங்களில் போலி

B. C. C. லேபல்களை ஒட்டி

"B. C. C. வயிற் ஒயில்"

என்று பெயரிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனை செய்து வருகின்றார்கள் என்பதை இத்தால் பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். பொது மக்கள் தேங்காய் எண்ணெய் வாங்கும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு கோரப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்தும் மட்டுப்படுத்தப்பட்ட

பிரிட்டிஷ் சிலோன் வர்த்தகநிறுவனம்

8660


அளவெட்டி வங்கிக் கொள்ளை சந்தேகநபர்

# கைவிலங்குடன் தப்பி ஓட்டம்

(மட்டுவில்)

அளவெட்டிக் கிராமிய வங்கிக் கொள்ளை தொடர்பான சந்தேகநபர் கைவிலங்குடன் ரயிலிலிருந்து குதித்துத் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிகிறது.

கண்டிச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர், அங்கிருந்து யாழ்ப்பாணம் இறைச் சாலைக்குக் கொண்டு வரப்படும்போதே எஸ். சற்குணசிங்கம் என்ற இச்சந்தேகநபர் இவ்வாறு ரயிலிலிருந்து குதித்து ஓடியிருக்கிறார்.

சாவகச்சேரியில் வைத்து இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிகிறது. ரயிலில் இவர் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டதாகவும், சாவகச்சேரியில் ரயில் தரித்துப் புறப்பட்ட சமயம் மணற்பாங்கான பகுதியில் சந்தேகநபர் கைவிலங்குடன் குதித்து ஓட்டம் பிடித்தாராம். காவலுக்கு வந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் பின்னால் பாய்ந்து பிடிக்க முயன்றபோதிலும், சந்தேகநபர் தப்பிவிட்டதாகத் தெரிகிறது. பொலிஸார் தேடிவருகின்றனர்.

## குளிக்கச் சென்ற இளம் பெண் கால்வாய்க்குப்பலி

(மட்டக்களப்பு)

குளிக்கச் சென்ற இளம் பெண் ஒருவர் வலிப்பு ஏற்பட்டு பரிதாபகரமாக் கால்வாய்க்குப் பலியானார்.

இச்சம்பவம் உன்னிச்சைப் பகுதியில் உள்ள நெடுஞ்சேனை என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. இவ்வாறு காலஞ்சென்றவர் தாளங்குடாவைச் சேர்ந்த இளம் தாயான சி. சீதேப்பிள்ளை [24 வயது] என்பவராவார்.

பிரஸ்தாப மரணம் குறித்து கன்னன்குடா கிராம சபைப் பகுதி சடுதி மரண விசாரணை அதிகாரி திரு. சி. கிருஷ்ணபிள்ளை விசாரணை நடாத்தினார். பாவற்கொடிச்சேனை கிராமசேவகர் திரு. க. பரசுராமன் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட சடுதி மரண விசாரணை அதிகாரி விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத்தீர்ப்பளித்தார். [அ]


## விளம்பரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வரையறுக்கப்பட்டுள்ளது]
பருத்தித்துறை

### பதவி வெற்றிடம்

கடனுதவு] முகாமையாளர் தரம் III

மேற்படி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு எமது சங்க எல்லைக்குள் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களைத் தமது விலாசம் குறிப்பிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான தபாலுறையை அனுப்பியோ அல்லது எமது அலுவலகத்தில் நேடியாகவோ வந்து பெற்றுக்கொள்ளலாம்.

வயது: 23-க்கும் 50-க்கும் இடைப்பட்டிருத்தல்வேண்டும்.

இச்சங்கத்தில் சேவையிலிருப்போருக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

கல்வித் தகைமை: [1] கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி; அல்லது
[2] கூட்டுறவு வேலையாளர் [உயர்தர] தராதரப் பத்திரமும் ஒரு வருட கால அனுபவமும்; அல்லது
[3] கூட்டுறவு வேலையாளர் [சாதாரண தர] தராதரப் பத்திரமும், மூன்று வருட கால அனுபவமும்.

வதிவுத் தகைமை: குறைந்தளவு 2 வருடமாவது யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.

வேதனம்: ரூபா 300 — 500
12.50 X 10, 15 X 5

விண்ணப்ப முடிவுத் திகதி: 20-3-78.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புப் பத்திரம், வதிவுத் தகைமைப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன், விண்ணப்பப் பத்திரம் பதிவுத் தபாலில் "தலைவர், பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு 20-3-78ம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
பல. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

01-3-78. 8667

## Wanted

Wanted a clerk of works to supervise 1½ million rupees worth of building work for a period of 2 years. Applications close in 15-3 78. Those who have applied before need not Apply again.

Director,
8668 J. C. T. I., Vaddukoddai.

ஈழநாடு
The Eelanaadu

## ஏற்றுமதியும் இறக்குமதியும்

பதினைந்து லட்சம் ரூபாய் பெறுமதியான இறால் இந்த வாரம் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தில் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபாய் கடன்வைக்கப்பட்டிருந்ததாகவும் இறால் ஏற்றுமதிக்கு இப்போதுள்ள மவுசு நீடித்தால் அந்தக் கடனைத் தீர்ப்பதுடன் கடற்றொழில் கூட்டுத்தாபனம் இலாபமீட்டும் ஒரு துறையாக விளங்கும் என்றும் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

இப்பொழுதுதான் இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு இறால் முதல் தடவையாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே நோர்வேக்கு இறாலும், கணவாயும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. சுறாச் செட்டைக்கும், கடலட்டைக்கும் வெளிநாடுகள் பலவற்றிலும் பெருங்கிராக்கியிருக்கிறது.

இறாலில் இன்கு இறாலுக்குப் பெரும் மதிப்பு. சுறாச் செட்டை, கணவாய், இறால், கடலட்டை முதலிய கடல்படு திரவியங்களால் நமது நாடு அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறது.

தேயிலையும் ரப்பரும் தெங்குப் பொருள்களும்தான் நமது நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருள்கள் என்ற நிலை இப்போது மாறிவிட்டது. புதிய புதிய உற்பத்திப் பொருள்களும் இப்போது ஏற்றுமதியாகின்றன.

இது நமக்குப் பெருமைதான்.

வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களிலும் உளுந்து, பயறு போன்ற தானிய வகைகளிலும் நாம் தன்னிறைவு கண்டோம். உளுந்தை நாம் ஏற்றுமதியும் செய்திருக்கிறோம்.

நமது நாடு கடலால் சூழப்பட்ட தீவு ஆனாலும் கடலிலுள்ள திரவியங்களை இன்னும் நாம் சரிவரப் பயன்படுத்தவில்லை.

நமது கடல்பிரதேசத்தில் வேற்றுநாட்டு மீன்பிடிப் படகுகள் வந்து மீன்பிடித்துச் செல்கின்றன.

ஜப்பானுக்கு இறால் ஏற்றுமதி செய்தால் மட்டும் போதாது. கப்பல்கட்டும் தொழிலில் இன்று உலகில் முன்னணியில் நிற்பது ஜப்பான். கடற்றொழிலும் அது முன்னணியில் நிற்கிறது. நவீன மீன்பிடி உபகரணங்களையும் அது உற்பத்தி செய்கிறது.

நமது நாட்டில் கடற்றொழிலை விருத்தி செய்வதற்கு ஜப்பானின் உதவியைப் பெறுவது பயனுள்ளதாயிருக்கும்.

இறாலும் மற்றும் கடல் பொருள்களையும் ஏற்றுமதி செய்து அந்நியச்செலாவணி சம்பாதிக்கும் அதேவேளை, நாம் ஜப்பானிலிருந்து தகரத்தில் அடைத்த மீனை இறக்குமதி செய்துவருவது தான் வேடிக்கை.

உள்நாட்டில் மீன்விலை உச்சத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இப்போது இறால், கணவாய் போன்ற இனங்கள் சாதாரண மக்களின் கைக்குஎட்ட முடியாமலிருக்கிறது.

இன்னும் ஜப்பானுக்கு இறால் ஏற்றுமதி செய்யத் தொடங்கினால் இறால் இங்கு காண முடியாத பொருளாகிவிடக்கூடும்.

ஏற்றுமதிசெய்து அந்நியச் செலாவணி சம்பாதிப்பது நல்லதுதான். ஆனால், நாட்டு மக்களின் தேவை நிறைவேறியபின் அல்லவா ஏற்றுமதி

ஒருபக்கம் ஏற்றுமதி செய்துகொண்டு, மறுபக்கம் சகல பொருள்களையும் இறக்குமதி செய்வது உள்நாட்டில் உற்பத்தியை வெகுவாகப் பாதிக்குமென்பதை மறந்துவிடக்கூடாது.

ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை சம்பந்தமாக அரசாங்கம் விரைவில் புனராலோசனை செய்வது நல்லது.

# நாகவிகாரைச் செய்தி குறித்து

## பொலிஸ் மா அதிபர் அனுப்பிய தகவல்

### குமாரசாமி தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

நாகவிகாரை தாக்கப்பட்டு விட்டதென்ற தகவல் அனுப்பப்பட்டு 20 நிமிடத்தால், பொலிஸ்மா அதிபர் கொழும்பிலிருந்து யாழ். பொலிஸ் அதிபர் செனிவரத்தினவிற்கு 'யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் நாகதீபத்தைகடற்படையினர் காவல் செய்வர்' என்றும் ஒரு ரேடியோ தகவல் அனுப்பினார்.

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த அம்பாறை பொலிஸ் கான்ஸ்டபிள் முத்துக்குமாரு குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

சட்டத்தரணி பார்லட் கேள்விகளுக்கு குமாரசாமி தொடர்ந்து கூறியதாவது: இரண்டாவது தகவல் அனுப்பியது எனக்குத் தெரியும். ஒரு செய்தி கொழும்பிற்கு அனுப்பினால் இலங்கையிலுள்ள எல்லா பொலிஸ்நிலையங்களிலும்கேட்கும், மற்ற பொலிஸ் நிலையங்களும் அத் தகவலை எடுத்துக் கொள்ளலாம்.

சட்: ரேடியோவில் தகவல் அனுப்பும் நோக்கம், எல்லாப் பொலிஸ்நிலையங்களும் அறிவதற்கு?-ஆம்.

சட்: கொழும்புக்கு அனுப்பும் தகவல், மற்ற பொலிஸ் நிலையங்களிலும் அறியலாம்?-ஆம்.

சட்: எல்லாப்பொலிஸ் நிலையங்களிலும் தொடர்ந்துஇரவு பகலாக வானொலியை அவதானித்துக் கொண்டிருப்பார்கள்?-ஆம்.

கமிஷனர்: பொலிஸ்மாஅதிபருக்கு அனுப்பும் தகவல் எல்லா பொலிஸ் நிலையத்திலும் வானொலியில் கேட்கும்?-முக்கிய தகவல் என்றால், பொலிஸ்மா அதிபர் எல்லா பொலிஸ்நிலையங்களுக்கும் அறிவிப்பார்.

சட்: அது ஒருபுறம் இருக்க, அந்தத் தகவலை, எல்லாப் பொலிஸ் நிலையத்திலும் வானொலிமூலம் அவதானிக்கலாம்?-ஆம்.

சட்: நாகவிகாரை தாக்கப்பட்டது ஒரு பொய்த்தகவல்?-எனக்குத் தெரியாது. நான் பொலிஸ் நிலையத்திலேயே இருந்தேன். வெளியில் செல்லவில்லை.

சட்: இப்ப அது பொய்த்தகவல் என்று தெரியும்?-ஆம்.

சட்: அந்தத் தகவல் பொய் என்று பின் அறிவிக்கப்பட்டது?-ஆம்.

சட்: 15 நிமிடத்தால் அத்தகவலை ரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது?-ஆம்.

சட்: இதுபற்றி விசாரணை நடக்கிறது?- 3 முறைமையால் பொலிஸ் மா அதிபர், ஒரு அறிக்கை அனுப்பினார் பின் போய் வாக்குமூலம் அளித்தேன்.

சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகம்: 17ம்தேதி உமது கடமை நேரம் என்ன?- காலை 6 மணிக்கு.

சட்: எத்தனை மணிவரை?- 2மணிவரை.

சட்: என்ன கடமை?- ரேடியோ ஓப்பரேட்டர்.

சட்: எங்கு வேலைசெய்தீர்?- வழக்கமாக ஒரு ரேடியோ அறையுண்டு. அதைவிட விசேடமாக ஒரு ரேடியோ இயங்கியது.

சட்: அங்குயார்பொறுப்பு?- குருசாமி.

சட்: அவருடன் வேலை செய்தீர்?-ஆம்.

சட்: குருசாமி எங்கே இருந்தார்?- அந்த அறையில் எனக்கு முன்னால்.

சட்: எங்கே இருந்தார்?- எனக்கு முன்னால்.

சட்: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர், முதல் தகவல் சொன்னபோது குருசாமியும் இருந்தாரா?-ஆம்.

சட்: 15 நிமிடத்திற்குபின் 2-ம் தகவல் அனுப்பிய போதும் இருந்தார்? ஆம்.

சட்: இரண்டு தகவல்களையும் ஜேக்கப் அனுப்பினர்?- ஆம்.

சட்: அவர்தான் வயர்லஸ் ஒப்பறேட்டர்?-ஆம்.

சட்: 2-ம் செய்தி குருநாதன் கொடுத்தார்?-ஆம்.

சட்: நாகவிகாரை தாக்கம் பட்டது என தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் குணசேகரா சொல்ல, குருசாமி அங்கே இருந்தார்?-ஆம்.

சட்: அதற்கு குருசாமி உமக்கு என்ன சொன்னர்?- எழுதிக்கொண்டுபோய் கெதியாய் அனுப்பு என்றார் [சிரிப்பு]

சட்: 15 நிமிடமும் குருசாமி உமது அறையில் இருந்தவர்?-ஆம்.

சட்: அந்தநேரத்தில்வானொலி அறைக்குள் யாரும் வந்தனரா? ஞாபகமில்லை.

சட்: திடீரென குருசாமி எழுந்து சென்று 'முதல் தகவலை ரத்துச் செய்யுமாறு 2-ம் தகவல் கொடுத்தார்?-ஆம்.

சட்: கொழும்பிலிருந்துஏதாவது தகவல் வந்ததா?-புத்தகத்தை பார்க்க வேண்டும்.

சட்: (புத்தகத்தை கொடுத்து) இதில் பாரும்?-ஆம்.

சட்: யார் தகவல்?-பொலிஸ் மா அதிபரின்.

சட்:- யாருக்கு?-யாழ். பொலிஸ் அதிபருக்கு.

சட்: என்ன தகவல்? தயவு செய்து வாசியும். நாகவிகாரையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்" என்று.

சட்: எத்தனை மணிக்கு வந்தது?-11 20 மணிக்கு.

சட்: அதுமட்டும்தானா? நாகதீபத்தை கடற்படையினர் காவல் செய்வர் என்றுமிருந்தது.

சட்: அதற்கு முன் எப்ப கடமை செய்தீர்?-ஒரு கிழமை கடமை செய்தேன்.

### யோகேந்திரா துரைசுவாமி

தமிழர் முற்போக்கு இயக்க தலைவர் திரு யோகேந்திரா துரைசுவாமி மகஜர் சமர்ப்பித்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இப்பிரச்னைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை தெரிவிக்கவிரும்புகின்றேன்.

இச்சம்பவங்களை தடுப்பதற்கான மாற்று மருந்துகளை தங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். ஆகஸ்ட் மாதம் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் பலரின் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

நாங்கள் இங்கு நடைபெற்றுவரும் விசாரணையை நேரில் அவதானித்துப் பலர் கூறிய கண்ணீர்க் கதைகளைக் கேட்டோம். சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடந்த சம்பவங்களைக் கேட்டோம் சட்டத்தைப் பாதுகாப்பவர்களே சட்டத்தை மீறிய செயலை அறிந்தோம்.

இப்படியான சம்பவங்கள் இனிமேல் ஏற்படாவண்ணம் தடுத்து நிறுத்தி முற்றுப்புள்ளி வைப்பதற்கான காரணங்களை யிட்டு அக்கறை கொண்டுள்ளோம்.

நாட்டின் சகல மக்களும் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் சம அந்தஸ்துடனும் நீதியுடனும் வாழ்வதற்கான ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும்.

இதற்கான வழிவகைகள் என்ன? மாற்று மருந்துகள் எவை என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மத்திய அரசு, உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனத்திலுள்ள எந்தவொரு உத்தியோகத்தரும் அந்தந்தப் பகுதி மக்களின் மொழியை அறிந்திருக்கவேண்டும். அதாவது எந்தப் பகுதியில் அவர் வேலை செய்கின்றரோ அந்தப் பகுதி மக்களின் மொழியை அறிந்திருக்கவேண்டும். பொலிஸ் சேவைக்கு ஆட்களைத் திரட்டும் போது அவருக்கு, தமிழராயிருந்தால் சிங்களமும், சிங்களவராயிருந்தால் தமிழும் கட்டாயம் அறிந்திருக்கவேண்டும்.

இதை, நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களமும் தமிழும் போதிப்பதன் மூலம் நிறைவேற்றச் செய்யலாம். பொதுப் பரீட்சைகளில் சிங்களம் தமிழ் ஆகிய பாஷைகளை கட்டாய பாடமாக்கவேண்டும். இதனை அமுல்செய்வதற்கு நாட்கள் செல்லுமாதலால் தற்காலிக முறையாக ஒருவர் பதவிக்குத் திரட்டப்படும்போது, அவர் இலாகாப் பரீட்சையொன்றில் நிரந்தரமாக்கு முன் இரண்டாவது மொழி [சிங்களம் அல்லது தமிழ்] சித்தியடையவேண்டும்.

பாதுகாப்புப் படைகளான பொலிஸ் கடற்படை இராணுவம் விமானப்படையில் சகல இனத்தவர்களும் இருக்க வேண்டியது அவசியம். இப்படியான முறையாகப் பாதுகாக்கும் படை ஒரு தேசியப் படையாக மிளிர்வதுடன் ஒவ்வொரு படை வீரருக்கும் தேசிய உணர்வை ஏற்படுத்தும். இது சேவைகளில் எழும் இனப் பிரச்னைகளைத் தடுக்க வழிவகுக்கும்.

இங்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள சில பொலிஸார் நடத்திய தாக்குதல் பற்றி அறியக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸார் பெரும்பாலும் ஓரினத்தவராக இல்லாமலிருந்திருந்தால் இதனைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

காவற்படையினர் சேர்க்கப்படும்போது திறமைக்கு முதலிடம் அளிப்பதைக் கவனத்திற்கு எடுக்கவேண்டும். சேவைக்கு எடுக்கப்பட்ட பின் பயிற்சியளிக்கப்படவேண்டும். முக்கியமாக ஒழுங்கு பற்றியும் பொதுமக்களுடனை தொடர்புகள் பற்றியும் பயிற்சியளிக்க வேண்டும். தாங்கள் நினைத்தபடி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயலை ஒழித்து, மனிதாபிமான முறையில் நடக்க வழிவகுக்கவேண்டும். மக்களுக்கு கடமை செய்யவே தாங்கள் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை அவர்கள் உணரச்செய்ய வேண்டும்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் பரஸ்பரம் நல்லெண்ணம் ஒத்துழைப்பு இருக்கவேண்டும். பொலிஸாரைப் பற்றிப் பொதுவாக நல்ல அபிப்பிராயம் இல்லை. குறிப்பாக இனக் கலவரத்தின் போது இந்நிலைமை இருந்தது.

முக்கிய பிரமுகர்களைக் கொண்ட ஒரு பிரஜைகள் கமிட்டி உருவாக்கப்படவேண்டும். இக்கமிட்டி ஒவ்வொரு பொலிஸ்நிலையத்திலும்இயங்க வேண்டும். இந்தக் கமிட்டி குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை சந்தித்துப் பொதுமக்களுடன் நல்லெண்ணத் தொடர்பை ஏற்படுத்த உதவி செய்யவேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

எங்களுக்கு எங்கள் பிழைகளைக் காண விருப்பமில்லை ஆனல் மற்றவர்களின் பிழை காண்பதில் மகிழ்கிறோம். இப்பழக்கத்தால் அதிகம் துன்பம் உண்டாகிறது.

— காந்திமகான்

# தமிழர் முற்போக்கு இயக்க தலைவர் சாட்சியம்

### மகஜரும் கொடுத்தார்

(யாழ்ப்பாணம்)

தமிழர்முற்போக்குத் இயக்க தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில், நிலைமையை சீராக்குவதற்கான வழிவகைகள் பற்றி விளக்கிக்கூறி, மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தார்.

தமிழர் முற்போக்கு இயக்கம் சார்பில் சாட்சியமளிப்பதாகவும், இந்த இயக்கத்தில் தமிழ்க்காங்கிரஸ் இணைச் செயலாளர் சட்டத்தரணி எஸ் செல்வராசா, சட்டத்தரணி வி. வல்லிபுரம் மற்றும் பலரும் இடம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

இப்படியான சம்பவங்களுக்கான மாற்று வழிகள் பற்றியும் விபரித்தார்.

சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகம் கேட்ட கேள்விகளுக்கு ஆராய்ந்து பதில் அளிக்க வேண்டுமென்றும் உடனடியாக ஆம், அல்லது இல்லையென்று கூறமுடியாதென்றும் சொன்னர்.

சட்டத்தரணி பாரிலட்: அம்மகஜரை படித்து ஆராய்ந்த பின் விளக்கம் கேட்கவிரும்புகிறோம் என்றார்.

இதற்குப் பதிலளித்த திரு. யோகேந்திரா துரைசுவாமி தான் கமிஷன் அழைத்தால் எப்பவும் வரத் தயாராக இருப்பதாகக்கூறினர்.

கமிஷனர்: வேறு பிரதிகள் உண்டா?- இல்லை.

கமிஷனர்: இதில் பிரதிகள் எடுத்து சட்டத்தரணிகளுக்கு கொடுக்கவேண்டும். இந்த மகஜர் படித்து ஆராய்ந்து எழுதப்பட்டிருக்கிறது, உதவியாக இருக்கும்.

சட்: அண்டலூட் மணிவாசகம்: 1948 ம்ஆண்டுக்குமுன் நாடு சுதந்திரமடையமுன், சிங்களவர் தமிழரிடையே நல்லுறவு இருந்தது. தமிழர் நம்பிக்கை வைத்திருந்தனர். 1948-ம் ஆண்டுக்குப்பின்தான் நல்லுறவு மறையத் தொடங்கியது- அப்படி சொல்ல முடியாது. 1948-க்கு முன் நல்லுறவு இருந்திருந்தால் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை எழுப்பியிருக்கத் தேவை வந்திராது.

சட். அண்டலூட்: யூ. என். பி சரி சுதந்திரக்கட்சிசரி, கம்யூனிஸ்ட், சமசமாஜ கட்சிகள் தமிழரை கைவிட்டன. தமிழர் பிரச்னையை தீர்க்கத் தவறின அதனால்தான் தமிழ் ஈழகோரிக்கை பிறந்தது தமிழர் ஏன் தனிநாடு கோர வேண்டி வந்தது. சிங்கள அரசாங்கங்கள் தான், ஈழத்திற்கு அடிக்கல் நாட்டின.

மொழிக் கொள்கையால், தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு ஒதுக்கப்பட்டது. இரண்டு பிறப்பான தேசம் உருவாக, மொழிப்பிரச்னை வழிவகுத்தது. இது தென்பகுதி அரசி

(7ம் பக்கம் பார்க்க)

### சன்சோனிக்கமிஷன்விசாரணை

# எஸ். பி. லியனகே கூறிய 'தொடர்கதை'— 'யாழ்நகரை மிஸ்டர் அமிர் நாசப்படுத்துகின்றார்; கிணற்றுத்தவளைக்கு நாட்டுநடப்புத் தெரியுமா?

## சிங்கள, முஸ்லிம் கடைகளை யாழ்ப்பாணத்தில் சூறையாடினர்''

### டாக்டர் கணேஷன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**''யாழ்ப்பாணச்சம்பவங்கள் பற்றி அனுராதபுரம் எஸ். பி. லியனகே கூறுகையில் அது ஒரு நீண்ட கதை என்றார். யாழ்ப்பாணத்தில் பொலிசாரைச் சுட்டுவிட்டார்கள் என்றும் அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கவும் மறுத்துவிட்டனர் என்றும் நவீன மார்க்கெட்டைத் தீயிட்டுக்கொளுத்திவிட்டனர் என்றும் எஸ். பி. லியனகே கூறினார். மிஸ்டர் அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தை நாசப்படுத்துகின்றார். கிணற்றுத் தவளைக்கு நாட்டில் என்ன நடக்கிறதென்று தெரியாது என்றும் எஸ். பி. லியனகே கூறினார்.''**

மேற்கண்டவாறு யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் திருநாவுக்கரசு கணேசன் நேற்று சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

### அனுராதபுரத்தில்

ஆகஸ்ட் 77ல் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றினேன். அங்கு அன்று காலை என் வீட்டிலிருந்து ஆஸ்பத்திரிக்குப் போனேன், அப்போது டாக்டர் நவபாலச்சந்திரனும் மனைவியும் 5 வயதுக் குழந்தையும் வந்தனர். அவருடன் அங்கொடை ஆஸ்பத்திரி லிகிதர் வாமதேவனும் வந்தார்.

என்னை டாக்டர் நவபாலச்சந்திரனுக்கு அறிமுகம்செய்து வைத்தார். அவர் திருமலையிலிருந்து வாடகைக்காரில் யாழ்தேவியில் செல்வதற்கு அனுராதபுரம் வந்ததாகக் கூறினார் அங்கு குண்டர்கள் தங்கள் உடைமைகளைக் கொள்ளையடித்துவிட்டதாகவும் கூறினார்.

### அமெரிக்காவில் இருந்து வந்தவர்

டாக்டர் நவபாலச்சந்திரன் அமெரிக்காவிலிருந்து விடுமுறைக்கு இங்கு வந்திருந்தார். கொள்ளையர்கள் அவர்களது பிரயாண தஸ்தாவேஜுகளையும் எடுத்துச்சென்றுவிட்டனர். இதனால் டாக்டர் நவபாலச்சந்திரன் பெரும் கவலையடைந்திருந்தார், குண்டர்கள் வாடகைக்காரரையும் தாக்கினர் இதுபற்றி புகார்செய்ய காரில் பொலிஸ் நிலையம் சென்றோம். 11-30 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் வந்தார். பின் டாக்டர் நவபாலச்சந்திரனும் மனைவியும் என் காரில் வந்தனர். வீட்டுக்குச் சென்றபோது வரதராசா இருந்தார் டபிள்யு எச் எம் பெரேரா வந்து என் காரை பாதுகாப்பான இடத்தில் விடுமாறு கூறினார்.

அயலவரான ஜெயவர்த்தனா வந்து கலவரம் நடப்பதாகவும் தங்கள் வீட்டிற்கு வந்து இருக்குமாறும் சொன்னார்.

1-30 மணியளவில் வீட்டிலிருந்த சாமான்களைக் கட்டி வைத்துவிட்டு ஜெயவர்த்தனவின் வீட்டுக்குப் போனோம். நான் திரும்பவும் வீட்டுக்கு வந்தேன் இராணுவத்தினர் அப்போது ஜீப்பில வந்தனர். ஆஸ்பத்திரித் தொழிலாளர் வந்து வீட்டை தாக்கப்போகிறார்களென்றும், பாதுகாப்பிற்குப் பொலிஸ்நிலையம் செல்லுமாறும் கூறினர். உடனே பொலிஸ் நிலையம் போனோம். இராணுவ ஜீப்பில் ஏறிச் சென்றோம், வீட்டைப்பூட்டி ஜெயவர்த்தனவிடம் சொல்லிவிட்டுச் சென்றோம். பெறுமதியான பொருட்களை விட்டுச் சென்றோம், பொலிஸ்நிலையத்திலிருந்தபோது வீடு கொள்ளையடிக்கப்பட்டதாக அறிந்தேன்.

### காருக்குத் தீ வைத்தனர்

எங்கும் பதட்டநிலை காணப்பட்டது, 6 மணிக்கு சகல டாக்டர்களும் எம் எஸ் பங்களாவிற்குச் சென்றோம். இராணுவத்தினரும் நின்றனர். இராணுவ உதவியுடன் நான் வீட்டுக்குப் போய்ப் பார்த்தேன். வழியில் கார் ஒன்றுக்கு குண்டர்கள் தீ வைத்தனர். நான் வீட்டிற்குச் செல்லும் போது பெரேராவும் வந்தார். அங்கு தாமதியாமல் புறப்பட்டோம், சுகாதார அத்தியட்சகர் வீடுநிக்குக் காவல் இருந்தது. இரவு 10-30 மணிக்கு களைப்பாக இருந்தது நிலத்தில் ஒரு கடுதாசியை விரித்துவிட்டு படுத்திருந்தேன்.

### லியனகே வந்தார்

நள்ளிரவு நேரம்...... டக்... டக்... என்று தட்டும் சத்தம் கேட்டது, அனுராதபுரம் எஸ் பி லியனகே வந்திருந்தார். வைத்திய அத்தியட்சகர் விஜயவர்த்தனவுடன் கதைத்தார். அப்போதுதான் எஸ் பி. லியனகே யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியிருந்தார்.

''யாழ்ப்பாணத்திலிருந்து வருவதாக எஸ் பி சொன்னார். 'யாழ்ப்பாணத்தில் நிலைமை எப்படி?' என்று விஜயவர்த்தன கேட்டார்.

### நீண்ட கதை என்றார்

''அது ஒரு 'நீண்ட கதை' என்றார் எஸ். பி. லியனகே.

'என்ன?'' என்று அவரிடம் கேட்டோம்.

''யாழ்ப்பாணத்தில் பொலிசாரை சுட்டுவிட்டார்கள். காயமடைந்த பொலிசாரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார்கள்'' என்று எஸ். பி. லியனகே கூறினார்.

காயமடைந்த பொலிசாரை அனுராதபுரம் கொண்டுவர ஒழுங்குசெய்தோம் என்றும் அவர் கூறினர்.

கமிஷனர்: அனுராதபுரத்திற்கு எப்படி? விமானமூலம்.

வைத்திய அத்தியட்சகர், யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை அறிய விரும்பினார்.

எஸ். பி லியனகே தொடர்ந்தார்.

''மிஸ்டர் அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தை நாசப்படுத்துகின்றார்.. கிணற்றுத் தவளைக்கு நாட்டில் என்ன நடக்கிறதென்று தெரியாது என்றும் எஸ். பி. லியனகே தொடர்ந்து கூறினார்.

எஸ். பி. லியனகே, தொடர்ந்து யாழ்ப்பாண சம்பவங்களை விபரித்தார்.

''யாழ்ப்பாணத்தில், சிங்கள முஸ்லிம கடைகளை கொள்ளையடித்துவிட்டார்கள்'.

'நவீனமார்க்கட்டை தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள்'

யாழ் வளாக சிங்கள மாணவர், தென்பகுதிக்கு வந்தால் என்ன நடக்குமென்று தெரியாது''

—இப்படி எஸ். பி. லியனகே சொல்லிக்கொண்டிருந்தார். நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம்.

மறுநாள் வவுனியா செல்வதற்காக கச்சேரியில் தங்கியிருக்குமாறு வைத்தியஅத்தியட்சகர் கூறினார், நான் இராணுவத்துடன் சென்று என் காரை எடுத்துவந்தேன்.

காலை 9-30 மணிக்கு அரசாங்க அதிபரைச் சந்தித்து 'பெட்ரோல் பெர்மிட்' எடுத்தேன்.

### அரசாங்க அதிபர் வருத்தம்

நடந்த சம்பவங்களைவிட்டு அரசாங்க அதிபர் வருத்தம் தெரிவித்தார். பெட்ரோல் நிலையத்திற்குச் சென்று பெற்ரோல் அடித்தேன். அப்போது திரு. கந்தசாமியையும் சந்தித்தேன். அன்று 2 பஸ் சென்றது. நாங்கள் போகவில்லை.

தாதிகள் விடுதியில் தங்கிச் செல்லலாம் என்று அனுராதபுரம் சுகாதார அதிகாரி கூறினார். பாதுகாப்பும் இருக்கும் என்றார். முன் அனுபவம் தெரிந்ததால் அது அபாயமாக இருந்தது. அதற்கு மறுத்துவிட்டோம்.

தொடர்ந்து கச்சேரியில் இருந்தோம். காரை பொலிஸ் நிலையத்தில் விடலாம் என்றனர்.

8-30 மணிக்கு எனது காருடன் வேறு கார்களும் இராணுவ பாதுகாப்புடன் வவுனியா சென்றோம். என்காரில் 3 குடும்பத்தினர் குழந்தை குட்டிகளுடன் ஊரடங்குசட்ட நேரத்தில் வந்தனர், வீதியில் எண்ணை ஊற்றப்பட்டிருந்த . வவுனியாவிற்கு 10-30 மணிக்கு வந்தோம் 19ம் திகதி காலை யாழ்ப்பாணம் வந்தோம்.

**செப்டம்பர் 31ம் தேதி** அனுராதபுர ஆஸ்பத்திரி நர்ஸ் குமுதி பியதாசா என் வீடு கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதாக அறிவித்திருந்தார். நான் மட்டுவாவிலிருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தேன். எனது சம்பள மீகுதிப்பணம் இன்னும் தரப்படவில்லை. எனக்கு 9000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இப்போ யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகிறேன்

சட்டத்தரணி பார்லட்: எஸ். பி. யாழ்ப்பாணத்திலிருந்து வந்துகதைத்தபோது நீர் இருந்தீர்?-ஆம்.

கமிஷனர்: எஸ். பி. லியனகே ஏன் யாழ்ப்பாணம் போனார்!

சட். சில்வா: யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட குழப்பத்தை

(5-ம் பக்கம் பார்க்)க

## நாடுமுழுவதும் பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கஏற்பாடு!

ஆகஸ்ட் கலவரம் சம்பந்தமாக நாடு முழுவதும் பாதிக்கப்பட்டவர்கள் கமிஷனுக்கு ஏற்கனவே புகார் செய்திருந்தால், அவர்கள் விரும்பும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தற்போது நாட்டில் எங்கிருந்தாலும் சரி, அவர்கள் யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கலாம் என சன்சோனிக் கமிஷன் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்க விரும்புகிறவர்கள், நாட்டில் எப்பாகத்திலிருந்தாலும், உடனடியாக ஆர். எஸ் சிவசுப்பிரமணியம், உப செயலாளர், சன்சோனி கமிஷன், பொது நூலகம் யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டவர்களும், நாட்டின் வேறு பகுதியில் பாதிக்கப்பட்டுத் தற்போது யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களும், இதுவரை யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்காவிடில், உடனடியாக சன்சோனிக் கமிஷனுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

இவர்கள், தங்கள் புகாரின் ஒரு பிரதியுடன், உடன் சன்சோனி கமிஷனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கமிஷன்முன் சாட்சியமளிக்க ஏற்கனவே, பொது ஸ்தாபனங்கள் மூலம் தொடர்பு கொண்டவர்கள், இவ்வாறு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கத் தேவையில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்க விரும்புகிறவர்கள், கமிஷன் உப-செயலாளர் திரு. ஆர். எஸ். சிவசுப்பிரமணியத்துடன் யாழ். பொது நூலகத்தில் நேரடியாகவும் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-அ)

## பொதுஸ்தாபனங்கள் வேண்டுகோள்

ஆகஸ்ட் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் சாட்சியமளிக்க விரும்பினால் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு புனர்வாழ்வுக் கழக தலைவர் திரு. எம். கி. நித்தியானந்தா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பாம்கோர்ட்டில் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்க விரும்புகிறவர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு தமிழ்த் தொழிற் சங்க கூட்டணிச் செயலாளர் திரு. சம்மந்தனும் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்க விரும்புகிறவர், தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இந்து இளைஞர் பேரவை சார்பில் ஆஜராகியுள்ள சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

நாடெங்கும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள், யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கவிரும்பினால் உடனடியாக, யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு டாக்டர் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

நாட்டில் எப்பகுதியில் பாதிக்கப்பட்டிருந்தாலும், தற்போது அந்தந்தப் பகுதியில் சாட்சியமளிக்க முடியாத சூழ்நிலையில் இருப்பவர்கள் யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கலாம் என்றும், இவர்களுக்கு கடமை லீவும், ரயில் வாரண்டும் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

[க-அ]

# பாராளுமன்ற

## திருத்தச் சட்டமும் பிரஜைகளின் உரிமைகளும்

சபையினதும், சபைஉறுப்பினர்களினதும் சிறப்புரிமை சம்பந்தப்பட்ட பிரச்னை, ஒரு கட்சிப்பிரச்னையல்ல என்பதை உணர்த்துவதற்காகவே பிரேரணைக்கு சபை முதல்வனும், எதிர்க்கட்சித்தலைவரும் கூட்டாக முன்னறிவித்தல் கொடுத்திருந்தனர். செனட்சபையும் இப்பிரேரணையை அங்கீகரித்திருந்தது இதன்பின்னர், ஜனப்பிரதிநிதிகள்சபை, சர்.ஜோன் கொத்தலாவலை, அமைச்சர் கலாநிதி சி டபிள்யு டபிள்யு கன்னங்கரா, அமைச்சர் எஸ் நடேசன், திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநயக்கா, கலாநிதி என் எம் பெரேரா ஆகியோரைத் தெரிவுக்குழுவுக்குத் தேர்ந்தெடுத்தது செனட்சபை அமைச்சர் சர் லலிதா ராஜபக்ஷ திரு எஸ் நடேசன், திரு பெரி சுந்தரம், திரு யு வி வன்னிநாயக்கா ஆகியோரைத் தெரிவுக் குழுவுக்குத் தேர்ந்தெடுத்தது பாராளுமன்றத்தின் இரு சபைகளிலிருந்தும் அங்கீகரிக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட தெரிவுக்குழுவின் தலைவராக சர். ஜோன் கொத்தலாவலை தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவாளர்கள் ரல்ப் தெரணியாகலவும், ஜ வி ஆர் சமரவிக்கிரமவும் இக்குழுவின் காரியதரிசிகளாக நியமனம் பெற்றனர். அப்பினர்களைத் தண்டிக்கவும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் உறுப்பினர்களை வெளியேற்றவும் தனது நடைமுறைகளை வகுத்துக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. பாராளுமன்றத்தில் உறுப்பினரா இல்லாத ஒருவர், பாராளுமன்றத்தின் நடைமுறைகளுக்கும் பணிகளுக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டாலோ அல்லது அழைப்பாணையை ஏற்க மறுத்தாலோ அல்லது சாட்சியம் அளிக்க மறுத்தாலோ, பாராளுமன்றத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் நடந்துகொண்டாலோ அவர் மீது சாதாரண சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கமுடியுமென்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக்குழு, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் அரசாங்க சபைக் காலத்தில் உருவாக்கப்பட்ட பாராளுமன்ற அதிகாரங்கள் சிறப்புரிமைகள் சட்டம் தன்னுதிக்குமுள்ள சட்டமியற்றும் மன்றத்திற்குப் போதுமானதல்ல எனக் கருதியது. ஜனப்பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும் அதிக அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் காப்புரிமைகளை

**எஸ். நடேசன் கியூ. சி.**

போது அரசாங்க சட்ட வரைஞராக இருந்த திரு எச் என் ஜீ பெர்னுண்டோ தெரிவுக் குழுவின் கூட்டங்களில்கலந்து கொண்டார். காரியதரிசிகளும் குறிப்பாக திரு. ரால்ப் தெரணியாகல, பல காமன்வெல்த் நாடுகளிடமிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பல்வேறு விஷயங்களையும் பெற்று தெரிவுக் குழுவுக்கு உதவினர்.

### பிரிட்டிஷ் காமன்ஸ்சபை

சுயாட்சி பெற்ற டொமினியன்களும், இந்தியாவும் பாராளுமன்ற உரிமைகள், சிறப்புரிமைகள்சம்பந்தப்பட்ட விஷயத்தில் பிரிட்டிஷ்காமன்ஸ் சபையின் முன்மாதிரியையே பின்பற்றி வந்தன. இந்தியாவின் சட்டசபைகள் சில, தமக்குரிய தண்டிக்கும் அதிகாரத்தைத் தவறுன முறையில் பயன்படுத்தியதால் பலத்த கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் இலக்காகின. ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் சில ஆண்டுகளுக்கு முன்னர் பாராளுமன்றச் சிறப்புரிமைகள் குறித்து ஆராயத் தெரிவுக் குழுவொன்றை நியமித்தது. பாராளுமன்றம் தன் வசம் வைத்துக்கொண்டுள்ள தண்டனை வழங்கும் அதிகாரத்தைக் கைவிட்டு, அதனை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்று அக்குழு சிபார்சுசெய்தது. ஆனல் இந்தச் சிபார்சை அமுல்நடத்தச் சட்டம் இயற்றப்படவில்லை.

இந்தியா மற்றும் டொமினியன் நாடுகளைப் போன்றில்லாமல் பாராளுமன்ற உரிமை மீறல் அவமதிப்பு ஆகிய விஷயங்களில் அமெரிக்கா தனிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கிறது. இவ்விஷயத்தில் காமன்ஸ்சபையின் நடைமுறையை அமெரிக்கா பின்பற்றவில்லை.

### அமெரிக்க அரசியல் சட்டம்

அமெரிக்க அரசியல் சட்டம் அந்த நாட்டுப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் தனித்தனியே தனது உறுப்பும் கொண்டிருக்கவேண்டும் என்று விரும்பியது. என்றலும் நாட்டின் சூழ்நிலை குறித்து நன்கு ஆராய்ந்து, தெரிவுக்குழு, தவறுசெய்பவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குக் காமன்ஸ்சபைக்குள்ள அதிகாரத்தை மட்டும் நமது பாராளுமன்றம் பயன்படுத்துவதில்லையென்றும், அந்த அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திடம் விட்டுவிடுவதென்றும் முடிவுசெய்தது.

தெரிவுக்குழு இந்த முடிவுக்கு வந்த காரணத்தை விளக்கி, அப்போதைய நீதியமைச்சர் லலிதா ராஜபக்ஷ, பாராளுமன்ற அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சம்பந்தமான மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் தெரிவித்ததாவது:

"சட்டமியற்றும் மன்றம் திறமையுடன் இயங்கவேண்டுமென்றல் அதற்குச் சில அவசியமான அதிகாரங்கள், சிறப்புரிமைகள், காப்புரிமைகள் இருக்கவேண்டுமென்பதைநாம் நினைவிற் கொள்ளவேண்டும். பிரிட்டிஷ்காமன்ஸ்சபைக்குரிய சகல அதிகாரங்களும் நமக்கு இருக்கவேண்டுமா என்பது குறித்துத்தெரிவுக்குழுஆராய்ந்தது. காமன்ஸ்சபைக்கு உரிமை மீறல் குறித்தும் அவமதிப்புக் குறித்தும் விசாரிக்கவும் தண்டிக்கவும் அதிகாரமிருக்கிறது. ஆனல் நாம் அத்தகைய நீதிமன்ற அதிகாரத்தைப் பெறவேண்டியதில்லை. நாம் சம்பந்தப்பட்ட விஷயத்தில், நாமே நீதிபதிகளாக இருக்கக்கூடாது. ஒருவர் இச்சபையின் உரிமையை மீறிவிட்டார் என்று நாமே புகார் கூறிவிட்டு, அதன் பின்னர் நாமே நீதிபதிகளாக மாறித் தண்டனையும் வழங்குவது சாதாரண நீதிக் கோட்பாட்டுக்கு முரணனது. ஆதலால் தெரிவுக்குழு காமன்ஸ்சபைக்குள்ள நீதிப் பிரயோக அதிகாரத்தை நமது பாராளுமன்றம் பயன்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்ய[illegible]. [வளரும்]

---

## சன்சோனிக் கமிஷன் விசாரணை:

# பொலிஸார் காவல்நிற்க குண்டர்கள் தாக்கினர்!

## எனக்கு சிகிச்சை அளிக்கவும் மறுத்தனர்!!"

### 'ஹெட்கார்ட்' தோமஸ் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**ஆகஸ்ட் 17ம் திகதி அனுராதபுரம் ரயில்நிலைய மேல்மாடி ஓய்வு அறையில் நாங்கள் தங்கியிருந்தோம். இரவு 11 மணிக்கு குண்டர்கள் வந்து தாக்கினர்கள். வெளியில் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் நின்றனர். பொலிஸ் ஒத்துழைப்புடனேயே இது நிகழ்ந்திருக்கிறது.**

நேற்று நடைபெற்ற சன்சோனி விசாரணைக் கமிஷன் முன்னிலையில் புகையிரத 'ஹெட்கார்ட்' திரு. மனுவேல் தோமஸ் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"17ம் தேதி பகல் தலைமன்னர் ரயிலில் கடமையாற்றினேன். அனுராதபுரத்திற்கு மாலை 6 மணிக்கு வந்தேன். அங்கு பதட்டநிலை காணப்பட்டது எங்களை ரயில் நிலைய மேல்மாடி ஓய்வு அறையில் தங்கச்சொன்னர்கள். அந்த அறையில் போயிருந்தேன்.

"அன்று இரவு 11மணிக்கு சிலர் வந்து தாக்கினர்கள். வெளியில் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் நின்றனர். நான் அப்போது படுத்திருந்தேன். இது பொலிசாருக்கு தெரியாமல் நடக்கவில்லை.

### இரும்புக் கம்பியால் அடித்தனர்

இரும்புக்கம்பியால் தலையில் அடித்தார்கள். நான் மயக்கமடைந்துவிட்டேன். பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு என்னை அவசரமாகக்கொண்டு சென்றனர். அங்கு எனக்குச் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டனர். உடனடியாக குருநாகல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று, டாக்டர் யோகேஸ்வரன் சத்திரசிகிச்சை செய்தார். எனதுகுடல் வெளியில் எடுக்கப்பட்டு சத்திரசிகிச்சை நடைபெற்றது. எனது உடமைகள் எல்லாம் போய்விட்டன.

கமிஷன்: எவ்வளவு?- 200 ரூபா ரொக்கமும், 2500 ரூபா பெறுமதியான உடமைகளும்."

"குருநாகல் பிஷப் வந்து ஆறுதல் கூறி வேண்டியஉதவிகளைச் செய்தார். பின் யாழ்ப்பாணத்திற்கு வந்து யாழ். ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றேன். நான் இளைப்பாற விண்ணப்பித்துள்ளேன். இன்னும், வைத்தியகமிட்டி விசாரணை பற்றிய தகவல்கிடைக்கவில்லை" என்றும் மனுவேல் தோமஸ் கூறினர்.

சட் பாரிஸ்டர் சத்திரசிகிச்சை செய்து குடல்எடுக்கப்பட்டது?- ஆம்.

சட்: இளைப்பாற விரும்புகிறீர்?- ஆம்.

சட்; இன்னும் வைத்திய குழு விசாரணை முடியவில்லை?- இல்லை.

சட்: யாழ்ப்பாணத்தில் வைத்திய குழு விசாரணை நடப்பதை விரும்புகிறீர்?- ஆம்.

சட். நீர் பெற்ற அனுபவத்தினல் அனுராதபுரத்தில் வைத்தியகுழு விசாரணை நடப்பதை விரும்பவில்லை?- இல்லை.

சட். சண்முகநாதன்: அன்று ரயில் நிலைய மேல் மாடியில் பொலிஸ் பாதுகாப்பு இருந்தது?- ஆம்.

சட்: தாக்கவந்த குண்டர்கள் பொலிஸ்ஒத்துழைப்புடன் வந்தனர்?- ஆம்.

சட்: வேறு வழியால் அவர்கள் மேல்மாடிக்கு வரமுடியாது?- ஆம்.

சட்; அந்த அறையில் வேறு யார் இருந்தனர்?- சாரதி விக்னேஸ்வரன்.

சட்: இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்?-ஆம்

சட்: ஒருவர் செட்டிகுளம் ரயில்நிலைய அதிபர் நடராசா?- ஆம்.

சட்: மற்றவர்?- சதாசிவம், ரயில் நிலைய அதிபர்

சட்: குருநாகல் ஆஸ்பத்திரியில் என்ன உடை அணிந்திருந்தீர்?- ஆஸ்பத்திரிச் சாரம் அணிந்தேன்.

சட். உமது சாரத்திற்கு என்ன நடந்தது?- தெரியாது.

சட்: காவல் நின்ற பொலிசார் துவக்கு வைத்திருந்தனர்? -ஆம். (ஸ)

---

## யாழ்.நகரை மிஸ்டர் அமிர்—

[4ம் பக்கத் தொடர்ச்சி]

திறுத்த.

சட்: சண்முகலிங்கம்: எஸ். பி.யுடன் டி. ஐ. ஜி. அனேசெனிவரத்தினவும் சென்றார்.

சட்' பாரிஸ்டர்: எஸ். பி. லியனகே உங்களுக்குச்சொன்னதெல்லாம் பொய்?- ஆம்.

சட்: வைத்திய அத்தியட்சகருக்கு எஸ். பி. சொன்னதெல்லாம் பொய்?- ஆம்.

சட்: யாழ்?வளாக சிங்கள மாணவர் தெற்குக்கு வந்தால் என்ன நடக்குமென்றும் லியனகே கூறினர்?- ஆம்

சட்: அப்போது வளாக சிங்கள மாணவர் தெற்குக்கு வரவில்லை?- இல்லை

சட்: யாழ். நகரில் சிங்கள, முஸ்லிம் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக எஸ். பி. கூறினர்?- ஆம்

சட்: நவீன மார்க்கெட் எரிக்கப்பட்டதாகவும் கூறினர்:- ஆம்

சட்: அரசியல் கட்சியுடன் உமக்கு தொடர்பில்லை:- இல்லை

சட்: பாதுகாப்பளிக்கவேண்டிய உயர் பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கவில்லை?- இல்லை

சட். அண்டலூட் மணிவாசகம்: யாழ்ப்பாணத்திற்கு எப்போ வந்தீர்?- சம்பவத்தின் பின்

### தமிழ் ஊழியர் சங்கம்

சட்: தமிழ் ஊழியர் நலன் கருதி ஒரு சங்கத்தை டாக்டர் பாலசிங்கத்தின் உதவியுடன் ஆரம்பித்தீர்கள்?- ஆம்

சட்: யாழ்ப்பாணம் நாவலர் வீதி 148ம் இலக்கத்தில் தலைமைக் கந்தோர் இருக்கிறது?- ஆம்

சட்: அங்கு பலர் வந்துநடந்ததைக் கூறினர்கள்?- ஆம்

சட்: சிலர் துணிமணியின்றி வந்தனர்? ஆம்

சட்: பொதுக்கூட்டம் நடத்தினீர்கள்?- றிம்மர் மண்டபத்தில்

சட்: எத்தனை அங்கத்தவர்கள் உண்டு?-சுமார் 3000தமிழ் ஊழியர்கள்.

சட்: கமிட்டிக் கூட்டமும் நடப்பதுண்டு?- ஆம்

சட்: வடக்கு, கிழக்கு மாகாணத்தைத் தவிர வேறு இடங்களில் கடமைசெய்ய முடியாத நிலையில் அங்கத்தவர்கள் இருக்கின்றனர்?- ஆம்

சட்: பாதிக்கப்பட்ட சிங்கள ஆசிரியர்களின் சம்பளம் அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டது?- ஆம்

சட்: தமிழ் ஆசிரியர்களுக்கு அப்படி நடக்கவில்லை?- ஆம்

சட்: சிங்கள ஆசிரியர்களுக்கு கடமைலீவு வழங்கப்பட்டது?- ஆம்

தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை?- இல்லை

சட்: சிங்கள ஆசிரியர், புத்தளம் காலி, கொழும்பிற்கும். மாற்றப்பட்டனர்:- ஆம்

சஷ்: தமிழ் ஆசிரியர் இடமாற்றம்கோரி விண்ணப்பித்தும் எதுவும் நடக்கவில்லை?- இல்லை

சட்: உம்மை அனுராதபுரம் போகும்படி அறிவித்தனர்?- ஆம்

சட்: நீர் போகவில்லை?- இல்லை

சட்: சிங்கள ஊழியர்களுக்கு- சிங்கள சகோதரர்களுக்கு சலுகை வழங்குவதை ஆட்சேபிக்கவில்லை?- ஆம்

சட்- தமிழ் ஊழியருக்கும் சலுகை வழங்குமாறு கேட்டீர்கள்?- ஆம்

சட்: செப்டம்பர் 18ந்தேதி யாழ். ரயில் நிலையத்தில்ஒருசம்பவம் நடந்தது?- ஆம்

சட்: அதனல் பலர் போக முடியாமலிருந்தனர்?- ஆம்

சட்: விரைவாக ஒருகமிஷன் நியமிக்கும்படி உங்கள் சங்கம் கோரியது?- ஆம்

சட்டத்தரணி சண்முகலிங்கம்: யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பொலிஸாருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என எஸ். பி. கூறினர்?- ஆம்

சட்: அவர்களை விமானத்தில் கொண்டுசென்றதாகவும் கூறினர்?- ஆம்.

சட்: அதுபொய் என்று அறிந்தீர்? ஆம்.

சட்: எஸ். பி லியனகே சொன்னதெல்லாம் பொய்?- ஆம்

சட்: உமது வீடு கொள்ளையடிக்கப்பட்டதாக, திருமதி பியதாசா அறிவித்தார்? ஆம்

சட்: அதுபற்றி விஜயவர்த்தனவுக்கு, அறிவித்தீர்?- ஆம்

சட்: குண்டர்களால் தாக்கப்பட்ட வீட்டிற்கு உம்மிடம் நஷ்டமும் கேட்டனர்?- ஆம்.

சட்: உமது சொந்த ஊருக்கு வர மகிழ்ச்சியாயிருந்தது?- ஆம்

சட்: அனுராதபுரம் வைத்திய அத்தியட்சகர் டாக்டர்

(8 ம் பக்கம் பார்க்க)

**Regal** Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.

MICHAEL CAINE
in
The Romantic English Woman
(Color)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்-Adults only)

ராஜ தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
**மேயர் மீனாட்சி**

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் நடித்த
**எங்களுக்கும் காலம் வரும்**

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**

கடைசி வாரம்
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஃ கமலஹாசன் ஃ ரஜனிகாந்த்
ஃ எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பஷீராஜாவின்
**மரகதம்** சிவாஜி - பத்மினி நடித்த
(புதிய பிரதி)

சனி, ஞாயிறு (4, 5-3-78) காலை 8 30 மணிக்கு மட்டும்
THE TALE OF A LITTLE HUNCH
BACK HORSE


"ம. கி. விவகாரம்:

# சமரஸத்திற்கு பெகினின் யு. எஸ். விஜயம் உதவும்"

## கார்ட்டர் நம்பிக்கை

லண்டன், மார்ச் 3

மத்திய கிழக்கு விவகாரம் சுமுகமாகத் தீர்வதற்குரிய சாத்தியத்தை இஸ்ரேலியப் பிரதமரின் அமெரிக்க விஜயம் ஏற்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதே வேளை இஸ்ரேலிய எகிப்திய தலைவர்களுக்கிடையில் விரைவில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் நடைபெறும் என்று அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஜனாதிபதி சதாத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தெரிவித்தார்.

சதாத்தின் கடிதம் ஒன்றை அவர் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினிடம் கையளித்தார். (உ)

றொடீஷிய உள்நாட்டுத்தீர்வு:

# டிச. 31க்குப்பின் ஆட்சி கறுப்பர் கையில்

லண்டன், மார்ச் 3

றொடீஷியப் பிரதமர் திரு. இயன் ஸ்மித்துக்கும், மூன்று மிதவாத கறுப்பர் தலைவர்களுக்கும் இடையில் நேற்று இரண்டரை மணித்தியாலங்கள்வரை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இவ்வுடன்படிக்கை இன்று கைச்சாத்தாகவிருந்தது.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன் ஆட்சிப்பொறுப்பு சிறுபான்மை வெள்ளையரிடம் இருந்து பெரும்பான்மை இனத்தவரான கறுப்பரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். (உ)


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
முத்துராமன்-விஜயா
நடித்த
**நாணல்**

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
**துணிவே துணை**


# இணையும் காங்கிரஸுக்கு இந்திரா தலைவர்?

புதுடில்லி, மார்ச் 3

பிளவுபட்ட இரண்டு காங்கிரஸ் கட்சிகளினதும், உயர் மட்டத் தலைவர்களினதும் முயற்சி வெற்றிபெற்று, இரு கட்சிகளும் இணையும் பட்சத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவியாகத் தெரிவுசெய்யப்படலாமென்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த தேர்தலில் உத்தியோகபூர்வமான காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட படுதோல்வியை அடுத்து அதன் தலைவர் திரு. பிரமானந்த ரெட்டி தமது தலைவர் பதவியை ராஜினமாச்செய்ததை அடுத்தே இணையும் காங்கிரஸ் கட்சித் தலைவராக வருவதற்குத் திருமதி காந்திக்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

மகாராஷ்டிரம், அஸாமில்

# ஜனதா ஆட்சி அமைக்க மார்க்ஸிஸ கம். ஒத்துழைப்பு

புதுடில்லி, மார்ச் 3

மகாராஷ்டிரம், அஸாம் ஆகிய மாநிலங்களில் ஆட்சி அமைக்க ஜனதா கட்சிக்குப் பூரண ஒத்துழைப்பு அளிக்க இந்திய மார்க்ஸிஸக் கம்யூனிஸ்ட் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனதா கட்சிப் பொதுக் காரியதரிசி மதுலிமாயி இத்தகவலைத் தெரிவித்தார்.

மார்க்ஸியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் நேற்று ஜனதா கட்சியினர் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே மார்க்ஸியக் கம்யூனிஸ்ட்கட்சி ஜனதா கட்சிக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளதென்றும் அவர் கூறினார்.

இதேவேளையில், மகராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சி அமைக்க திருமதி இந்திரா காந்தியின் ஆலோசனையின் பேரில் உத்தியோகபூர்வமான காங்கிரஸ் கட்சியையும், இந்திரா காங்கிரஸையும் இணைக்கப் பல பிரமுகர்கள் முயற்சித்து வருகிறார்கள். (இ)


யாழ்-ராணியில்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-45
4 காட்சிகள்

ஜெய்சங்கர்
ஜெய்சித்ரா
தங்கவேலு
அசோகன்
மனோகர்
வி. எஸ். ராகவன்
சகுந்தலா
தேங்காய்
சீனிவாசன்
மற்றும் பலர்
திறம்பட நடித்த



**பணக்கார பெண்**
டைரக்ஷன்: ப. ராஜேந்திரன்
"தர்மத்தின் வாழ்வுதன்னைச் சூது கௌவும்
தருமம் மறுபடியும் வெல்லும்"
என்ற மகாகவியின் சத்தியமுழக்கம் 'பணக்காரப் பெண்'
கதையின் முடிவாகப் பரிணமிக்கிறது.

வெலிங்டன்... 

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

Rio Daily 4 shows
Jaffna (Phone: 7607)
COWBOY THRILLER
Ramon the Mexican


## இராமகிருஷ்ண ஜெயந்தி

[யாழ்ப்பாணம்]

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி இம் மாதம் 10ம் தேதி வருவதனை முன்னிட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாஸ்ரம மாணவர்களிடையே கட்டுரை பேச்சுப் போட்டிகளை நடாத்தவுள்ளது. (உ)


ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா
நடித்த
**சித்தி**

# 'எஸ். பி. சுந்தரலிங்கம் பயப்பட வேண்டாமென்றார்'

## சிங்கள ஆசிரியர் தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சன்சோனி கமிஷன்முன் யாழ் சிங்கள மகாவித்தியாலய சிங்கள ஆசிரியர் திரு. பியரத்ன குணரத்தின தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்த விபரம் இங்கே தரப்படுகின்றது! இதன் முற்பகுதி நேற்று வெளியாயிற்று. ஆசிரியர் பியரத்ன குணரத்ன கூறியதாவது:

மறுநாள் நாகவிகாரைக்கு வந்தேன், நாகவிகாரைப் பொறுப்பதிகாரியை சந்தித்தேன்.

கமிஷர்: யார் பொறுப்பதிகாரி?- ஒரு இன்ஸ்பெக்டர் இருந்தார், அவரிடம் முதல் நாள்சம்பவத்தைக்கூறி 'பெல்ட்'டைத் திருப்பித் தருமாறு கேட்டேன். எனக்கு 'பெல்ட்' கிடைத்தது.

கமிஷனர்: திரும்பக் கிடைத்ததா?-ஆம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திருப்பித் தந்தார்.

கமிஷனர்: உமக்கு முதல் நாள் அடித்தவர்களும் நின்றார்களா?- என்னைத் தாக்கியவர்களில்லை. ஏரியல், டெற்றோலையும் கேட்டேன், கிடைக்கவில்லை, கல்வெட்டுக்குள் தேடினேன் அங்கில்லை, பின் ஒரு பெடியனிடம் ஏரியல் பெற்றேன்.

என் சொந்தக் கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கமிஷனர்: என்னகூற விரும்புகிறீர்? தற்செயலாக நான் அன்றைய தினம் ஒரு தமிழ் மகனாக இருந்திருந்தால் என் தலைவிதி எப்படியிருந்திருக்கும் என்று சிந்திக்கிறேன்.

கமிஷனர்: ஆலோசனைகளை இறுதியில் தெரிவிக்கலாம்.

குணரத்ன: 77 செப்டம்பர் 12ம் தேதி நடந்த சம்பவம் பற்றி கூறவிரும்புகிறேன். அன்று பாடசாலைக்கு சென்றேன் அங்கு இராணுவத்தினர் முகாமிட்டிருந்தார்கள் கல்வி அதிபதிக்கு அறிவித்தேன்.

அன்றையதினம் கச்சேரிக்கு சென்று எஸ் பி சுந்தரலிங்கத்தைச் சந்தித்தேன். மாநாடு ஒன்று நடந்தது. பயப்படத் தேவையில்லையென்றார். வழக்கம் போல, நாகவிகாரையில் இருந்தோம். பொலிசார்வெளியில் விடவில்லை. ஆசிரியர்கள் எல்லாரையும், பொலிசார் கலைக்கமுயற்சித்தார்கள்.

கமிஷனர்: யார் ஆசிரியர்கள்? சிங்களமகாவித்தியாலய ஆசிரியர்கள்.

கமிஷனர்: எல்லாரும் சிங்களவர்களா?-ஆம். பின் நாகவிகாரைப்பிக்கு தலையிட்டு, பிரச்னையை தீர்த்தார்.

### தமிழரைக் குறைவாக நினைக்கிறார்கள்

சிங்களப் பொலிசார் தமிழ் பகுதியான வடக்கிலுள்ள தமிழர்களை குறைவாக நினைக்கிறார்கள்.

சிங்களவர்களாயிருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி எவ்விதபாரபட்சமோ யாருக்கும் காட்டக்கூடாது.

கமிஷன் விசாரணை சிங்களப் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும். இவ்விசாரணையை சிங்களமக்களும் அறிந்து,உண்மையை அறியவேண்டும்.

சட்டத்தரணி பார்லட்: ரசஐனின் காரில் போக உடைத்து சேதப்படுத்தினீர்கள்?—ஆம்.

சட்: கோரேமாகபொலிசாரால்தாக்கப்பட்டீர்கள்?-ஆம்.

சட்: பொலிஸ் பெயர் தெரியுமா?—சப் இன்ஸ்பெக்டர் பொறுப்பாயிருந்தார். அடையாளம் காட்டுவேன்.

சட்: உம்மை அடித்தவர்களை காட்டுவீரா?-ஆம்.

சட்: சப் இன்ஸ்பெக்டரின் பேயர்?- எதிரிசிங்கா.

சட்: அவரை முன்பு தெரியுமா?-தெரியாது.

சட்: யூனிபோம்இருந்ததா? நம்பரும் இருந்தது.

சட்: நம்பரைக்கவனிக்கவில்லையா?- அப்போது குழப்பமான நிலையிலிருந்தேன்.

கமிஷனர்: உங்களை அடித்தவர்களில் எதிரிசிங்கா இல்லை? -இல்லை.

சட்: உம்மை நன்றாக உபசரித்ததனால்தான் குழப்ப நேரத்திலும் யாழ்ப்பாணம் வர விரும்பினீர்?-ஆம்.எனக்கு எவ்விதபயமும் இருக்கவில்லை இங்குள்ளதமிழர்கள் எவ்விதத்திலும் குறைவாக நடத்தவில்லை. அப்படி பயம் இருந்திருந்தால் பொலிசாருக்குத் தான்.

## கடற்படை வெற்றி

[பண்டத்தரிப்பு]

மாதகல் விபுலானந்தர் படிப்பகத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட பின்னொளி கரப்பந்தாட்டப் போட்டியை யாழ் பொலிஸ் அதிபர் திரு டகளஸ் ரண் முத்துக்கல ஆரம்பித்து பித்துவைத்தார்.

இந்த இறுதிப் போட்டியில் காரைநகர் கடற்படைக் கோஷ்டியினர் வெற்றிபெற்று சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் பாரியாரான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். [உ]

பாலைதீவு உற்சவம்:

# மண்டைதீவிலிருந்து இலவச படகுசேவை

(யாழ்ப்பாணம்)

பாலைதீவு அந்தோனியார் உற்சவத்தையொட்டி 40 இயந்திர வள்ளங்களில் யாத்திரிகர்களைப் பாலைதீவுக்கு இலவசமாக ஏற்றிச் செல்ல மண்டைதீவு ஆழ்கடல் தொழிலாளர் நல நோக்குச் சங்கம் முன்வந்துள்ளது.

இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாத்திரிகர்கள் ஏற்றிச் செல்லப்படுவர்.

ஞாயிற்றுக்கிழமை பாலைதீவிலிருந்து காலை 7 மணி தொடக்கம் யாத்திரிகர்களை இச் சங்கம் படகுகளில் ஏற்றி வரும்.

இவ்வுற்சவத்தையொட்டி விசேட பஸ். சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

துறைநீலாவணையில்

# சுகாதாரசேவைக்கு உயர் அதிகாரிகள் குழு பாராட்டு

(கல்முனை)

கல்முனை சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவும், கல்லாறு பொதுசுகாதாரபரிசோதகரின் பகுதியுமான துறைநீலாவணைக் கிராமத்தில் கிழக்குமாகாணத்தின் முன்னேடிச் சுகாதார நலன்புரிச்சங்கத்தின் சுகாதார நடவடிக்கைகளை உயர் அதிகாரிகள் குழு ஒன்று வந்து பார்வையிட்டது.

இக்குழுவில் கொழும்பிலிருந்து சுகாதாரக்கல்வி தலைமையலுவலகத்தின் வைத்திய உத்தியோகஸ்தர்கள், டாக்டர்கள் டபிள்யு கே பற்றிக், எஸ் டபிள்யு எம் பெரேரா மட்டக்களப்பு சுகாதாரசேவை அத்தியட்சகர் டாக்டர் என். கனகசபை, கல்முனை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் செல்வி எம். பி. யோன் பிள்ளை, வாழைச்சேனை, மட்டக்களப்பு அம்பாறை,திருக்கோயில் சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரக்கல்வி போதனாசிரியர் ஜனுப் எஸ். ஐ. எம். கலீல் மாவட்ட பொதுசௌக்கிய பரிசோதகர் இராசசிங்கம் மாவட்ட மலேரியா தடுப்பு உத்தியோகத்தர் செல்வி தம்பிநாயகம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

தொண்டர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை, விசேடமாக சிறுவர்,வளர்ந்தோருக்கான மலகூடங்களமைக்கப்பட்டமை, தடை மருந்து கொடுக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகளை வீடுதோறும் சென்று இக்குழுவினர் நேரடியாக அவதானித்தனர்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்கிற்கு திரு. சா. சரவணமுத்து தலைமை தாங்கினார் கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி எம். பி. ஜோன்பிள்ளை, கல்லாறு சுகாதாரப்பரிசோதகர் திரு பொ. நடுநாயகம் ஆகியோரும் ஏனைய சுகாதாரஉத்தியோகஸ்தர்களும் பாராட்டப்பெற்றனர் திரு. க. செல்லத்துரையால் சங்கஅறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் நன்றியுரையும் வழங்கப்பட்டது இந் நிகழ்ச்சிகள் யாவும் தகவல் பகுதியினரால் படமாக்கப்பட்டது. (உ)

## இனி இல்லை

[உடுப்பிட்டி]

யாழ் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் 1975ம் ஆண்டு நிறுத்தப்பட்ட தொழிற் கற்கைகளிலான தேசிய தகுதித்தேர்வு (டிப்ளோமா) பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று தொழில் நுட்பக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சி. ரி. பொன்சேகா அறிவித்துள்ளார்.

தொழில் நுட்பக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சி. ரி. பொன்சேகாவிடம் இத் தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவர் மன்றத் தூதுக்குழு கோரியபோதே இத்தகவலைத் தெரிவித்தார். (அ)

## தமிழர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யல் வாதிகளின் வேலை. ஈழத் தமிழரின் வேலையல்ல. சிங்கள அரசாங்கங்களே, பிரிவினையை உருவாக்கின; தென்னிலங்கை சிங்களவருக்கும், வடக்கு கிழக்கு தமிழருக்குமென்ற நிலைக்கு சிங்கள அரசியல் வாதிகளே அடிக்கல் நாட்டின பிரச்னைகளை உருவாக்கின. சிங்களம் சட்டம் வந்த பின் தெற்கு தமிழ் பேசாதவர்களுக்கும், வடக்கு கிழக்கு களம் பேசாதவர்களுக்கும் என்ற நிலை ஏற்பட்டது?- வேறு காரணங்களும் உண்டு.

"'பைலட் பிரேம்நாத்'

# தென்னகக் கலைஞரைச் சாடுவதில் அர்த்தமில்லை"

## 'தெய்வம்தந்த வீடு' இயக்குநர்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பைலட் பிரேம்நாத் படத்தைப் பொறுத்தவரையில் மாலினி பொன்சேகாவைத் தவிர வேறு இலங்கைக் கலைஞர்கள் பிரதம அல்லது இரண்டாவது மூன்றுவது பாத்திரங்களில் நடிக்கவில்லை. இதற்காக நாம் சிவாஜி கணேஷனையோ மற்றும் இந்தியக் கலைஞர்களையோ குறை கூறுவதில் அர்த்தமில்லை,

இவ்வாறு தற்போது இலங்கையில் தயாராகி வரும் ஷெட்டி பிலிம்ஸ் 'தெய்வம் தந்த வீடு'' தமிழ் திரைப்படத்தின் டைரக்டர் டபிள்யூ. வில்பிரட் சில்வாவும், அசோசியேட் டைரக்டர் பி. எஸ் நாகலிங்கமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''கூட்டுத் தயாரிப்பென்பது இரு மொழிகளால் அல்லது இரு நாடுகளால் இணைந்து உருவாக்குவதே. இப்படி கூட்டுத்தயாரிப்பு என்ற லேபலில் 'ரஹஸ் குமந்தரனய என்ற இலங்கை-பாகிஸ்தான் படம் வண்ணத்தில் உருவாகி வெளியாகியது. அது எம் நாட்டில் சிங்கள மொழியில் மட்டுமே திரையிடப்பட்டது.

பாகிஸ்தான் நாட்டில் உருது மொழியில் திரையிடப்பட்டது. இப்படத்தில் நடிக்க வென்று பாகிஸ்தானிய கதாநாயகன் ஒஸ்மான் என்பவரும் அகத்தாலில் கவி-மோட்டா என்ற சகநடிகர்களும் கதாநாயகியாக மாலினி பொன்சேகாவும் சமஞ அமரசிங்க, பிரடிசில்வா ஜெனிட்டசமரவீர, ரோய்டி சில்வா ஆகியோரும் ஒளிப்பதிவாளராக அந்நாட்டிலிருந்து வக்கார் புக்காரியும் நம்நாட்டில் எம். ஏ. கபூரும் இயக்குநர்களாக அடசல் கானும் இங்கு வில்பிரட் சில்வாவும் இசைக்கு அங்கு கமால் அஹமதுவும் இங்கு பி. எல். ஏ. சோமபாலவும் இன்னும்பல தமிழ்- சிங்கள கலைஞர்களும் பணியாற்றினர் படம் இலங்கையின் பல பாகங்களிலும் படமாக்கப்பட்டது. வெற்றிகரமாக திரைகளில் ஓடியது ரசிகர்கள் அறிந்த விஷயம்.

இதைப்போலல்லாது கூட்டுத்தயாரிப்பு என்ற போர்வையில் இப்பொழுது "பைலட் பிரேம்நாத்'' என்ற தமிழ்ப்படமும் இலங்கையில் உருவாக்கப்படுகின்றது. தமிழகத்தின் சிறந்த நடிகை- நடிகையர் கலைஞர்குழு ஆகியோர் இங்கு வந்து இப் படத்தை உருவாக்கி வருகின்றனர் "பைலட் பிரம்நாத்'' வெற்றி பெறட்டும் இந்தப் படத்தில் எத்தனை இலங்கை நடிகர்கள் நடிகைகள் நடிக்கிறார்கள் எத்தனை கலைஞர்கள் வேலை செய்கிறார்கள் அதுவும் என்ன செய்கிறார்கள் என்பதே முக்கியம்.

இதை விட்டு நான் எக்ஸ்ரா பாகத்தில் நடிக்க மாட்டேன், எனக்கு முக்கிய பாகம் தந்தால் நடிப்பேன் என்று ஒரு சிலர் தினசரிகளில் அறிக்கை விடுவதும் சிவாஜியுடன் நடிப்பதை பெரும் பேரின்பமாகக்கருதுகிறேன் என்று அறிக்கைவிடும் மற்றுஞ்சிலர் சிவாஜி என்படத்தில் எக்ஸ்ராவாக நடிக்கத்தயாரா என்று கேட்கும். தயாரிப்பாளர்களும் இலங்கைத்தமிழ்த் திரையில் சிவாஜி கணேசன் நடிக்கும் பைலட் பிரேம்நாத் படத்தைப்பற்றி அறிக்கைகள் விட்டுக் கொண்டேயிருக்கின்றனர். நம்மவர்கள் இப்படத்தில் என்ன செய்கிறார்கள் என்பதே முக்கியம் இதை இங்கு நம் நாட்டில் உள்ள கூட்டுத்தயாரிப்பாளர்கள் உணர்ந்திருக்கவேண்டும். இவர்கள் தான் நம் நாட்டின் நடிக நடிகையரை கலைஞர்களை அவமதித்திருக்கிறார்களே யொழிய அவர்களில் எந்தப்பிழையுமில்லை. இதை நம்நாட்டுத் தோழர்கள் உணர வேண்டும்.

இங்குள்ள நடிகரோ, நடிகையோ பிரதம அல்லது இரண்டாவது மூன்றுவது பாத்திரங்களில் நடிக்கவில்லை. மாலினி பொன்சேகாவைத் தவிர இங்குள்ள கலைஞர்கள் யாருக்கேனும் முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை இதற்காக நாம் இந்தியக்கலைஞர்களையோ சிவாஜி கணேசனையோ மற்றும் நடிக நடிகையரையோ குறை கூறுவதில் பயனில்லை.

இதை இங்கு நம் நாட்டில் உள்ள கூட்டுத்தயாரிப்பாளர்கள் உணர்ந்திருக்க வேண்டும் இவர்கள் தான் நம் நாட்டின் நடிகர் நடிகையரை கலைஞர்களை அவமதித்திருக்கிறார்களே யொழிய அவர்களில் எந்தபிழையுமில்லை. தோழர்கள் உணர வேண்டும்

நம்நாட்டில் நடிகர்நடிகையர் இல்லையா? தொழில் நுட்பக் கலைஞர்களுக்குத் தான் பஞ்சமா? இருக்கிறார்கள் உதாரணமாக ''குக்கிரி கெல்ல என்ற சிங்கள்ப்படத்துக்கு வண்ணத்தில் வரும் பல காட்சிகளை திறமையாக எடுத்துக் கொடுத்த எம். ஏ. கபூர் "கோட் கிங்'' என்ற அமெரிக்க நிறுவனத்தின் படஒளிப்பதிவாளர் வில்லியம்பிலேக் ''றம்பேஜ்'' என்ற வெளிநாட்டு ஆங்கிலப்படத்தின் ஒளிப்பதிவாளர் வாமதேவன் சிதாதேவி என்ற வெளிநாட்டு ஆங்கிலப்படத்தின் ஒளிப்பதிவாளர் டொனல் கருணாரட்ண இத்தனை நபர்களும் நம்நாட்டுத் தோழர்களேயன்றி பிறநாட்டினர் அல்ல. இன்னும் எடிட்டர், றெக்கோடிஸ்ட், புரடக்ஷன் மனேஜர் உதவி டைரக்டர் என்று பலர் பணிபுரிந்துள்ளனர்.

இவர்களெல்லாம்இங்குஇருக்கும்போது ஆணி ஒன்றை அடிக்கக்கூட இந்தியாவிலிருந்து ஆட்களை அழைத்துக் கொண்டு வந்திருப்பதாகநடிகர் காமினி பொன்சேகா கூறியிருக்கிறார். நாங்கள் நண்பர் காமினியிடம் கேட்கிறோம், இதில் என்ன தவறு என்று காரணம் அவர்களுக்கு இருக்கும் நாட்டுப்பற்று. சகோதரப்பற்று நம்நாட்டின் கூட்டுத்தயாரிப்பாளர்களுக்கு இணைடைரக்டர்களுக்கு இல்லையே இதற்குப் போய் தமிழகக்கலைஞர்களை எதிர்ப்பதில் என்ன பிரயோசனம் நாம் நம்மைத்திருத்திக் கொள்ள வேண்டும்.

சின்னப்பாத்திரத்தில் நடிக்க மாட்டேன் என்று கூறுவோர் இப்படிக்கூச்சல் போட்டாலாவது இன்னும் கொஞ்சம் பெரிய பாத்திரமாவது கிடைக்காதா என்ற நப்பாசைக்காகவும்யார் அப்படிச் சொன்னது? நான்அப்படிச் சொல்லவில்லையே என்போர் பேராசைக்காரர்களாகவுந் தான் தெரிகிறது.எதுஎப்படிப் போனாலும் எல்லாமே புகழுக்குத்தான்.

வெள்ளம் தலைக்கு மேலாக ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போதுதான் வெள்ளம் வெள்ளம் என்று கூச்சலிடுகிறார்கள் வெள்ளம் வரப்போவது ஆறுமாதத்திற்கு முன்பே அறிக்கை விட்ட பலருக்கும் தெரியும். தெரிந்திருந்தும்

[8-ம் பக்கம் பார்க்க]

# பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி நிறைவெறியில் வந்தார்; அவருக்கு அவரையே கட்டுப்படுத்த முடியவில்லை

## தம்புள்ளை பொறியியலாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் புதிதாகப் பொறுப்பேற்ற அதிகாரி இரவு 9 மணிக்கு நிறை வெறியில் வந்தார். அவர் தம்புள்ளையில் நடைபெற்ற கலவர நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்தார். அவரால் தன்னையே கட்டுப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு தம்புள்ளையைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. திருச்செல்வம் தேவராசன் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தம்புள்ளையிலிருந்து மூன்று மைல்களுக்கப்பால் என் விடுதி இருந்தது. என் மனைவியும் இருந்தார். என் மனைவி ஆஸ்பத்திரியில் டாக்டராக இருந்தார் எனக்கு 2, 4 வயதுள்ள இரண்டு பிள்ளைகள் உண்டு

ஆகஸ்ட் 17ந் தேதி ஐந்து மணிக்கு முக்கால் மைலுக்கு அப்பால் மக்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். 15 நிமிடத்தில் தம்புள்ளையில் இனக் கலவரம் ஆரம்பித்துவிட்டதாக அறிந்தேன். பொலிஸாரிடம் பாதுகாப்புக் கேட்டேன் கிடைக்கவில்லை. எல்லா முயற்சியும் எடுத்தும் பயனில்லை. வீட்டிற்கு ஓடினேன். 360க்கு மேற்பட்ட குண்டர்கள் அணிவகுத்து என் வீட்டை நோக்கி வந்தனர். அப்போது வீட்டைக் காவலாளிகள் காவல் செய்தனர். அவர்களிடம் துப்பாக்கியும் இருந்தது. நாங்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுவிட்டோம்?

### பொலிஸ்நிலையம் முன் குண்டர்கள் கூச்சலிட்டனர்

பொலிஸ் நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில் என் வீடு இருக்கிறது. பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, குண்டர்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்பும் வந்து கூச்சலிட்டனர். அவர்கள் கந்தோரிலும், ஆஸ்பத்திரியிலும் எங்களைத் தேடியதாக அறிந்தேன்.

9.30 மணிக்கு மாத்தளை ஏ. எஸ். பி. அங்கு வந்தார். என்வீட்டை கொள்ளையடித்துவிட்டனர். நான் சில புத்தகங்களை எடுத்து வந்தேன். 3 மணிக்கு மாத்தளைக்கு வந்தோம். பல இடங்களில் ஒளிக்கவேண்டியிருந்தது. 20ம் தேதி இராணுவத்தினர் வந்தனர். மாத்தளை கோவிலுக்கு வந்தோம். என் உடமைகள் எல்லாம் எரிந்து விட்டது. 30,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

### பொலிசாரிடம் மன்றாடினேன்

என் விடுதிக்கு காவல் போடும்படி பொலிசாரிடம் வேண்டுமட்டும்மன்றாடினேன். ஒரு கான்ஸ்டபிளை யூனிபோமுடன் அனுப்புமாறு சொன்னேன். அவர்கள்கேட்கவில்லை. எனது விடுதி காவலாளிகளிடம் துவக்கு இருந்தது.

தம்புள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்ற உத்தரவு பெற்றிருந்தார். அவருக்காக மற்றொருவர் பதில் கடமையாற்றினார். அவரை 5 மணி முதல் இரவு 9 மணிவரை காணவில்லை. அவர் இரவு 9 மணிக்கு நிறைவெறியில் வந்தார்.

கமிஷனர்: எத்தனை பொலிசார் இருந்தனர்? 7 அல்லது 8 பேர். ஒருசிலரைப் பாதுகாப்புக்கு அனுப்பியிருக்கலாம் பொறுப்பதிகாரியும் இல்லை அப்போது மாத்தளை ஏ எஸ் பீ வந்தார்.

கமிஷனர்: ஏ.எஸ் பியின் பெயரென்ன? வியனகே (சிரிப்பு)

சட். பார்லட்; அவர்பெரும் உதவியாக இருந்தார்? ஆம்

சட்: தற்போது எங்கே கடமையாற்றுகிறீர்? வவுனியாவில்

சட்: உமது மனைவி? யாழ் ஆஸ்பத்திரியில்,

சட்டத்தரணி சண்முகநாதன்: உமது வீடு பொலிஸ் நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில்? ஆம்

சட்: முதலில் தம்புள்ளை சங்கரப்பிள்ளை கடை உடைக்கப்பட்டது? ஆம்

சட்: மற்றது உமது வீடும் வேலைமேற்பார்வையாளர் வீடும்தான் தம்புள்ளையில் உண்டு? ஆம்

சட்: 2 பொலிசாரை பாதுகாப்புக்கு அனுப்பியிருந்தால் அங்கு கலவரம் ஆரம்பித்திராது? ஆம், சங்கரப்பிள்ளை கடைக்கு முதலில் சிறுகூட்டத்தினரே சென்றனர். அவர்களை முதலில் அடக்கியிருக்கலாம்.

சட்: தம்புள்ளையில்விவசாய பாடசாலை உண்டு? ஆம்

சட்: அங்கு பல தமிழ் மாணவ மாணவிகள் படிக்கின்றார்கள்? ஆம்,

சட்: கலவரத்தில் அம்மாணவர் பல கஷ்டப்பட்டனர்? -ஆம்.

---

## பைலட்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

அணைபோடாமல் இருந்தது. தமிழகத்தினரின் குற்றமல்ல நமது குற்றம் இனிமேலும் பல வெள்ளங்கள் வரக்கூடும் வந்தபின் கூச்சலிடாமல் வருவதற்கு முன்பே அணைகட்டிக் கொள்ளு வேகமாக.

---


### தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ளவர்களும், நெசவு வேலை பழகவிரும்பும் பெண்பிள்ளைகளும் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும், தங்கும் வசதிகளுமுண்டு. விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்ரீஸ் 42 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8642,

---

விற்பனையாளராக பணிபுரிய 17 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகள் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பேபிநீட்ஸ், 59. மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். 8672


---

## யாழ்நகரை—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயவர்தன பெரும் உதவியாக இருந்தார்? ஆம். நல்ல வேலைசெய்தார். பெரும் உதவியாக இருந்தார்.

சட்: தமிழருக்கு உதவி செய்ததால் அவரும் பாதிக்கப்பட்டார்? ஆம் அனுராதபுரத்தில் அவர் கடமையாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் மாறிச்சென்று விட்டார்.

கமிஷனர்: இப்போ அவர் எங்கே? கொழும்பு ஆஸ்பத்திரியில்

சட்: அவரால் அனுராதபுரத்தில் வேலைசெய்ய முடியவில்லை? ஆம்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம்: அனுராதபுரத்தில் எஸ். பி. வியனகே, உங்களிடம் வந்து கதைத்தார்? ஆம்.

சட்: அப்போது கிணற்றுத் தவளைக்கு நாட்டில் நடப்பது ஒன்றும் தெரியாது. யாழ். வளாக சிங்கள மாணவர் தெற்குக்கு வந்தால் என்ன நடக்குமோ என்றார்? ஆம்.

சட்: கிணற்று தவளை என்று யாரை குறிப்பிட்டார்? திரு. அமிர்தலிங்கத்தை.

சட்: எந்த அமிர்தலிங்கத்தை? எதிர்க்கட்சித் தலைவரை.

கமிஷனர்: இணைப்பு அதிகாரி அதுதான் "கேர்ணல" (சிரிப்பு)

---


# மீனவர்களுக்கு
# ஓர் அறிவித்தல்

குறுலோன் கயிறு 2 MM தொடக்கம் 12 MM வரை

(கம்பாயம்) கப்பலில் ஜப்பானிலிருந்து வருகின்றது. ஏமாற்றத்தைத் தவிர்க்க மீனவர்களையும், சங்கங்களையும் முற்காசுகட்டி ஓடர் செய்யுமாறு வேண்டுகிறோம்.

சூடைவலைகள்

சூடைவலைகளும் இனிமேல் தனித்தனியே மீனவர்களுக்கு விற்கப்படும் உங்கள் அட்டைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வர்த்தக முகாமையாளர்
சீ-நோர்
குருநகர்.

8675


---

## யாழ். அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் மேலதிக அரசாங்க அதிபராக இருந்த காலத்திலே யாழ் மாநகர விசேட ஆணையாளராகக் கடமை புரிந்து பெரும் சேவை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆழ்ந்த பக்தி மானும், பொதுப்பணியும், மக்கள் மதிப்பும் ஊழியர் அன்பும் நிறையக்கொண்ட புதிய அரசாங்க அதிபர், அண்மையில் இளைப்பாற முன்னதாகக் கிடைக்கப் பெறும் விடுமுறைக்கு விண்ணப்பம் செய்திருந்தாராயினும் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தனவின் பணிப்பின் பேரில் அவர் புதிய யாழ். அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

திரு. ஏ. ஏ. ஜோசேப் இன்று அரசாங்க அதிபராகப் பதவியேற்கின்றார்.

1961ல் திரு எம் சிறிகாந்தா யாழ் அரசாங்க அதிபராக இருந்தபின்னர் தமிழர் ஒருவர் இப்போதுதான் யாழ். அரசாங்க அதிபராக நியமிக்கப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## நீதி அமைச்சரின் மகனுக்கு ஒருவருடச் சிறை!

(மட்டக்களப்பு)

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தின் மகன் சட்டத்தரணி எஸ். எம். தேவநாயகத்திற்கு விசேட நீதிபதி திரு. வால்டர் வைத்தியரத்ன நம்பிக்கை மோசடி வழக்கில் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையுடன் ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

ஏறாவூரைச் சேர்ந்த மரண விசாரணை அதிகாரி திரு. நல்லரத்தினத்திற்கு 12 ஏக்கர் காணியை விற்பனைசெய்வதாகக் கூறி அவரிடமிருந்து 6374 ரூபாவைப் பெற்றுக் கொண்டு காணியையும் பணத்தையும் கொடுக்காமல் ஏமாற்றியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அப்பீல் செய்யும் பட்சத்தில் ஐயாயிரம் ரூபா பிணையில் செல்லவும் தேவநாயகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. (இ)

---

## சிவகுமாரன் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தையில்

சட்: கண்டபின் பண்டாரவை, நீர் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டி வந்தீர்? ஆம்.

சட்: எங்கு காயம்? காலில்.

சட்: என்ன காயம்? சூட்டுக் காயம்.

சட்: வேறு என்ன கூறப்போறீர்? பண்டாரவை நான் ஆஸ்பத்திரியிலிருந்து 15ம் திகதி கூட்டிவந்ததாக ஈழநாடு பத்திரிகையில் வந்திருக்கிறது.

கமிஷனர்: 'ஈழநாடு' தமிழ் பத்திரிகையிலா? ஆம், அவரை நான் ஆகஸ்ட் 16ம் திகதி தான் ஆஸ்பத்திரியிலிருந்து கூட்டிவந்தேன்.

விசாரணை இன்று காலை 9 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

---

## வியட்னாம் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உரையாடலின் போது உடன் இருந்த திரு. அல்விஸ் வியட்நாம் விடுதலைப் போரில் கிடைத்த வெற்றிக்கான காரணம் பற்றி வினவிய போது, வியட்நாம் மக்களின் மன உறுதியே அவர்களின் வெற்றிக்கு காரணம் என்று திரு. தொங் கூறினார். [ம-இ]

---

## மரண அறிவித்தல்

### M. S. நடராஜா

திருநெல்வேலி M. S. நடராஜா அவர்கள் 3-3-78ல் சிவபதமடைந்தார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மனோகராஜா, சற்குணராஜா (லண்டன்), சந்திரலேகா (M. P. C. S. நல்லூர்), சிறீதரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் இராஜேஸ்வரன் (மகாராஜா ஆர்கனேசேஷன்), சோமாவதி (லண்டன்), கமலாதேவி (மானிப்பாய்) ஆகியோரின் மாமனும், தவராஜா (லண்டன்), பாலசுந்தரம் (லேக் கவுஸ்), கதிரவேலு (கச்சேரி, திருகோணமலை), சண்முகலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் சகலனும், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சிவனேசன் அவர்களின் மைத்துனரும், தையல்நாயகி, பஞ்சாட்சரம், சிவரத்தினம், அழகரத்தினம் (உரிமையாளர், நியூரோசன் எலெக்ரிக்கல்) ஆகியோரின் சகோதரருமாவார் அன்னாரது ஈமைக்கிரியைகள் அம்மன் கோவிலடி, "சாந்திநிகேதன்" இல்லத்தில் 4-3-78 காலை 10 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 8662

---

## "வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவ கடல் விமானப் படைகள் வெளியேற்றப்படவேண்டும்"

நாகவிகாரை......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழர் முற்போக்கு இயக்கத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

### இனப்பாகுபாடு காட்டும் அதிகாரிகளுக்கு நீதிமன்றத் தண்டனை

சகல சேவைகளிலும் ஒழுங்கு நிலைநாட்டப் படவேண்டும். குறிப்பாகப் பாதுகாப்புப் படையில் அது இருக்கவேண்டும். இனப் பாகுபாட்டை ஏற்படுத்தும் உத்தியோகத்தருக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும் இதில் சம்பந்தப்படுகிறவர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டும் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் இலாகா ரீதியாக இல்லாமல் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்படவேண்டும்.

பாதுகாப்புச் சேவையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது பதவி உயர்வில் திறமையும் கடைப் பிடிக்கப்படவேண்டும் இனக் கலவரத்தைத் தூண்டுவோரைத் தண்டிக்கச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் இனப் பிரச்னையை ஏற்படுத்தும் செய்திகளை அநாவசியமாக வெளியிடக்கூடாது.

வடக்கிலும் கிழக்கிலுமிருந்து ஆயுதப் படைகளான இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியன வெளியேற்றப்படவேண்டும்.

[தொடரும்]

---


இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவ்ன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram: Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka